நாமக்கல் கவிஞர்

# கம்பன் கவிதை இன்பக் குவியல்

வானதி பதிப்பகம்

# கம்பன் கவிதை இன்பக் குவியல்

நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை

வானதி பதிப்பகம்
தி.நகர் : சென்னை-17

முதற் பதிப்பு: டிசம்பர் 1965.

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 1-50

பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17.

## பதிப்புரை

தேசியக்கவி நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்களை, தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். நாடு சுதந்திரமடைய மகாத்மா காந்தி அவர்கள், அஹிம்சா வழி ஒன்றேதான் சரியானது என்று கூறியதை ஏற்றுக்கொண்ட எத்தனையோ தொண்டர்களில் நம் கவிஞர் அவர்களுக்கு முக்கிய பங்கு உண்டு. காந்தியைப் பற்றியும் அவரது கொள்கைகள் பற்றியும் தமிழ் மக்களுக்கு, ''கத்தியின்றி ரத்தமின்றி யுத்த மொன்று வருகுது'' என்று அறைகூவல் விடுத்தவர். ''தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு'' என்று பெருமிதத்தோடு கூறியவர் கவிஞர்.

அவர் கம்பனின் கவிதைகளில் திளைத்தவர். புலவரிடையே உயர்ந்த கம்பனின் கவிதைகளை கவிஞர் ஒருவர் உணருவதுபோல வேறு யாரால் உணர முடியும். நாமக்கல் கவிஞர் அவர்கள் கம்பனை முற்றிலும் உணர்ந்தவர்கள். அவர்கள் கம்பனைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து தமிழ் மக்களுக்கு வழங்கிய நூல் **கம்பன் கவிதை இன்பக்குவியல்.**

கம்பனின் கவிதைகளை நாம் முழுதும் அநுபவித்துப் படித்து இன்புற இந்நூல் தூண்டுகோலாக அமையும். கம்பனின் இலக்கிய நயத்தை எடுத்துக்காட்டிய கவிஞர் அவர்களுக்கு தமிழ் மக்கள் சார்பில் நன்றியைச் செலுத்துகிறேன். இந்நூலை வானதி பதிப்பகத்தின் வாயிலாக வெளியிட அநுமதித்த நாமக்கல் கவிஞர் அவர்களுக்கு என் வணக்கமும் நன்றியும் என்றும் உரித்தாகுக.

படித்து இன்புறுங்கள்.

சென்னை-17
24-11-'65

ஏ. திருநாவுக்கரசு,
வானதி பதிப்பகம்.

# கம்பன் கவிதை—இன்பக் குவியல்

உலக மகா கவிகளுள் தலைசிறந்தவன் கம்பன் என்று கற்றறிந்த பெரியோர்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். ஆனால், எப்படிக் கம்பன் உலக மகா கவிஞர்கள் எல்லாரினும் சிறந்தவன் என்பதை ஆராய்ந்து அனுபவிப்பவர் வெகு சிலர்.

சொற்சுவையிலும், பொருட் சுவையிலும் சந்தங்களின் சிறப்பிலும், கற்பனையிலும் கம்பன் கவிகள் மிகவும் ரசிக்கத்தக்கனவாக இருப்பதை, சராசரித் தமிழ்ப் படிப்புள்ள எல்லாரும் அறிவார்கள்.

அதற்குமேல் கம்பன் கவிகளின் கட்டுக்கோப்பையும், உவமான உவமேயச் சிறப்புகளையும், எடுத்ததை முடிக்கும் திறமையையும் பல நூறு கவிகளுக்குப் பின்னும் மறவாமல், ஒரு உவமானத்தைத் தொடரும் ஞாபக சக்தியையும் கண்டு அனுபவிக்க ஆராய்ச்சி வேண்டும்.

அப்படி ஆராயும்போதுதான் 'கம்ப சூத்திரம்' என்றும், 'கம்ப விசித்திரம்' என்றும் அறிஞர்கள் சொல்லுகின்ற பல அற்புதங்கள் கம்பன் காவியத்தில் மலிந்து கிடப்பதைக் கண்டு மகிழலாம்.

ஏனைய மகா கவிகளிடம் காண முடியாத இந்தச் சிறப்புகளால்தான்,

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவன்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை;
உண்மை, வெறும் புகழ்ச்சியல்ல.

என்று பாடினார் மகா கவி பாரதியார். இந்தப் பாட்டில் உள்ள, கம்பன், வள்ளுவன், இளங்கோ ஆகிய மூவருமே உலக மகா கவிகளுள் சிறந்தவர்கள் என்று பாடிய பாரதியார், இந்த மூவருக்குள்ளும் கம்பனே சிறந்தவன் என்ற தம்முடைய கருத்தை வலியுறுத்தவே கம்பனுக்கு முதலிடம் கொடுத்துப் பாடியிருக்கிறார் என்பது கண்கூடாத் தெரிகிறது. அப்படிப் பாடியது வள்ளுவரையும் இளங்கோவையும் குறைத்துக் காட்ட அல்ல. உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் எக்காலத்துக்கும் இன்றிமையாத அறங்களைப் புகட்டும் இணையற்ற திருக்குறளை இயற்றியவர், வள்ளுவர். ஒப்புயர்வற்ற கற்புக்கரசியான கண்ணகியின் கதையை விரிக்கும், ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய — சிலப்பதிகாரத்தைப் பாடியவர் இளங்கோ. வள்ளுவருக்கும் இளங்கோவுக்கும் தனித்தனியே பல சிறப்புகள் உண்டு.

ஆனால், புலவன் அல்லது கவிஞன் என்ற சொல்லுக்குரிய தகுதிகளில் இந்த மூவரில் கம்பனே முதலிடம் பெறத் தகுந்தவன் என்பதை மறுக்க முடியாது.

கம்பன் பாடியது இராம கதையே யானாலும், அது, திருக்குறள் அறவாழ்வை நடத்திக் காட்டும் ஒரு நாடகமாக விளங்குகின்றது. பொருத்தமான இடங்களில் ஆங்காங்கு திருக்குறள் சொற்றொடர்களை அழகுற அமைத்திருப்பது வியக்கத்தக்கது.



திருக்குறள் அறிவு மட்டுமல்ல, வடமொழியிலுள்ள வேதம், கீதை புராணங்களிலுள்ள நல்லறிவுகளும் அங்கங்கே மிளிர்கின்றன. கம்பன் வடமொழி இலக்கியங்களையும் ஐயம் திரிபுறக் கற்றவன் என்பது காணக் கிடக்கின்றது. அதனாற்றான், 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்று சொல்லப்படுகிறது.

கல்வியிற் பெரியானாக இருந்தது பெருமைக்குரியது தான். ஆனால், அந்தப் பரந்த கல்வியின் எந்த அறிவைத் தான் இயற்றிய மாபெருங் காவியத்தில் எந்த இடத்தில் அமைத்தல் பொருந்தும் என்பதை எப்படித் தான் நினைவுக்குக் கொண்டுவந்து இணைத்தானோ என்பதை எண்ணும்போது நம்முடைய வியப்பு அதிகரித்துத் திகைப்பூட்டி விடுகிறது.

அதனால் கம்பன் மானிட சக்தியினால் பாடினவன் அல்ல. சரஸ்வதியின் கடாட்சத்தால் 'எழுந்த ஞாயிறு விழுவதன் முன் கவி பாடினது ஏழு நூறே' என்றது உண்மைதானோ என்று எண்ணச் செய்கிறது.

அதனாற்றான்,

எண்ணி யெண்ணித் திட்டம் போட்டு எழுதினானோ!
எண்ணாமல் எங்கிருந்தோ கொட்டினானோ!
புண்ணியத்தால் உடன்பிறந்தப் புலமைதானோ!
போந்தபின்பு ஆய்ந்தறிந்து புகன்றதாமோ!
தண்ணியல்சேர் தமிழணங்கின் தவமேதானோ!
தயரதனும் சனகனுமே தரித்த நோன்போ!
விண்ணமுதின் சுவைகெடுத்தக் கம்பன் பாடல்
விரிந்தவிதம் என்றென்றும் வியப்பே யாகும்.

என்று பாடச் செய்தது.

'கம்பன் கவிதை இன்பக்குவியல்' என்ற தலைப்புக் கொடுத்துள்ள இந்த ஆராய்ச்சி நூலில் நாம் மேற்

கொண்டுள்ள பணி, கம்பன் கவித்திறத்தைப் புகழ்ந்து பாடிய பாடல்களைக் காட்டுவது அல்ல. இந்த நூலின் நோக்கம், கம்பன் காவியத்தில் குறிப்பிட்டப் பாடல்களை எடுத்துக்கூறி, அவற்றில் காணக்கிடக்கிற 'கம்ப சூத்திரத்தை' வாசகர்கள் அனுபவிக்கச் செய்வதே.

அப்படிக் குறிப்பிட்ட பாடல்களை எடுத்துக்கூறி அவற்றில் அமைந்துள்ள சிறப்புகளைக் காட்டுவதற்கு முன்னால், கம்பன் கவிநயத்தைப் புகழ்ந்து போற்றும் சில கவிகளைப் படிப்பது பயனுள்ளதாகும்.

மேலே உள்ள கவி, 'எப்படித்தான் கம்பன் இவ்வளவு பெரிய காவியத்தைத் தொட்ட இடத்திலெல்லாம் சுவை சொட்டப் பாடினானோ' என்ற வியப்பைக் காட்டுகிறது.

அடுத்த பாட்டு சாதி மத பேதமில்லாமல் எல்லா மக்களும் வணங்கத்தக்க தமிழ்தாயார் வீற்றிருக்கும் திருக்கோயிலாக வருணிப்பது சுவைக்கத்தக்கது. நீதி, கருணை, சத்தியம், காதல், அறம், வீரம் ஆகியவற்றிற்கு நிலையமான கனக மாளிகையாம் கம்பன் காவியம்

சாதிமத விலங்கினம் வாழ் காட்டை மாற்றிச்
சமனாக்கிச் சமரசமாம் தளத்தின் மேலே
நீதிநெறி கருணையெனும் நிலைகள் நாட்டி
நித்தியமாம் சத்தியத்தின் சிகரம் நீட்டி
காதல் அறம் வீரமெனும் கொடியைத் தூக்கிக்
கம்பன் என்பான் கட்டிவைத்தக் கனக மாடம்
ஆதிமுதற் பரம்பொருளின் சக்தியாகும்
அன்னை எங்கள் தமிழ்த்தெய்வம் அமரும் கோயில்.

இதற்கு அடுத்த செய்யுள், ஏழை பணக்காரன் என்று வேற்றுமையில்லாமல்—இக்காலத்தில் அடிக்கடி பேசப்படுகிற 'சோஷலிச' சமுதாயமாக—எல்லாரும் எல்லாவிதச் சுகபோகங்களையும் அனுபவித்துக்கொண்டு, சுத்த வீரர்களாகப் பகைவர்களை எளிதில் வெல்லக்கூடிய எந்திரப் பொறிகளுடன் தமிழன்னை அரசு நடத்தும் கோட்டையாம் கம்பன் காவியம்:



ஏழையென்று செல்வனென்று பேதம் எண்ணார்
எல்லாரும் எச்சுகமும் எளிதே பெற்றுக்
கோழையென்றக் குடிசனங்கள் எவருமின்றிக்
கொடுங்கோலும் கடுஞ்சிறையும் இல்லா நாட்டில்
வாழுதற்கு வேண்டும் எல்லா வளமும்தாங்கி
வந்தபகை நொந்துவிழப் பொறிகள்வைத்து
ஆழியுடன் தமிழ்த்தாயார் அரசுகாக்கும்
அற்புதமாம் கோட்டையன்றோ கம்பன் பாட்டு.

இதற்குப் பின்னுள்ள கவி, அரசனுக்கும் குடிமக்களுக்கும் உள்ள தொடர்பையும், பகைவர்கள் படையெடுக்க முடியாதபடி எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய வீரத்தையும், கணவனும் மனைவியும் சம கற்புடைய மனத்தராக இல்லறம் நடத்தும் முறையையும், பொதுவாக நாட்டிலுள்ள எல்லா மக்களும் கலையறிவும், தெய்வ பக்தியும், உள்ள அமைதியும், சமாதானமுமான வாழ்க்கை நடத்தவேண்டிய வழியையும் போதிக்கின்ற சாத்திரமாம் கம்பன் காவியம்—என்று வருணிக்கிறது:

வேந்தருக்கும் குடிகளுக்கும் பொருத்தம் சொல்லி
வேற்றரசர் படையெடுக்கா வீரம் கூறித்
தேர்ந்தபல கலையறிவின் இன்பம் தேக்கித்
தெய்வபக்தி நட்பிவற்றின் திறமும் சேர்த்து,
காந்தனுக்கும் காதலிக்கும் கற்பைக் கூட்டிக்
கட்டாயப்படுத்தாமல் கடமை பேசிச்
சாந்தமுள்ள சமுதாய அமைப்புக் காக்கும்
சாத்திரமாம் கம்பனென்பான் தந்த பாட்டு.

'கம்பன்' என்ற பெயரை நினைக்கும் போதே உலகம் இதுவரையிலும் கண்டறியாத அழகுள்ளவளாகக் கவிதா தேவியான கன்னிகை தோன்றி, நன்னயத்தோடு இன்னிசை பாடி, அதிசயிக்கத்தக்க அன்புடன் கலையமுது ஊட்டி, ஞானம் புகட்டி மோன நிலை அடையச் செய்வாளாம்—என்ற கற்பனை அடுத்த செய்யுள் :

கம்பனென்ற பெரும் பெயரை நினைக்கும் போதே
கவிதையென்ற கன்னிகைதான் வருவாள் அங்கே;
அம்புவியிற் கண்டறியா அழகினோடும்
அமரருக்கும் தெரியாத அன்பினோடும்
இன்பமென்று சொல்லுகின்ற எல்லாம் ஏந்தி
இன்னிசையும் நன்னயமும் இணைத்துக் காட்டித்
துன்பமென்ற மனத்துயரைத் துடைத்துவிட்டுத்
தூங்காமல் தூங்குகின்ற சுகத்தை ஊட்டும்.

நிற்க, கம்பன் கவிதையிலுள்ள சொற் சுவையும், பொருட் சுவையும், கற்பனைத் திறனும், வியக்கத்தக்க கல்விப்பெருக்கும் ஒரு புறமிருக்க, இராமாவதாரக் கதையைக் கம்பன் நடத்தியுள்ள போக்கே மிகவும் போற்றத் தக்கது.

கம்பராமாயணம், வடமொழியில் வான்மீக முனிவர் இயற்றியஇராமாயணத்தைப் பின்பற்றிய வழி நூல்தான். வழி நூல் என்றாலும், முதனூலுக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் கதைப்போக்கு அமைந்துள்ளது. அவதாரம் முதல் பட்டாபிஷேகம் முடிய நிகழ்ச்சிகள் வேறுபடுகின்றன. அன்றியும், கதாபாத்திரங்கள் அனைவருடைய குணச்சித்திரங்களும் முன்னுக்குப்பின் முரண்படாமல் மாற்றப்பட்டு இருக்கின்றன. மொத்தத்தில் கம்பராமாயணம் வழி நூல் என்று சொல்ல முடியாதபடி முதனூலாகவே விளங்குகின்றது. செய்யப்பட்டுள்ள



மாறுதல்களும் மிகவும் விரும்பத்தக்கனவாகத் தெய்வமாக் கதையைப் புனிதப்படுத்துகின்றன.

வான்மீக முனிவர் தந்த இராம கதையை அப்படி மாற்றிப் பாடியிருக்கும் கம்பநாட்டாழ்வாரைப் புகழ்ந்து பாடும் சில செய்யுட்களையும் இங்கே படித்து ரசித்துக் கொண்டே 'கம்பன் கவிதை இன்பக்குவியல்' என்ற பகுதிக்குப் போவோம்.

கரையில்லாதக் காட்டாற்று வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடும் வான்மீகி முனிவருடைய கவிகளாகிய நீர்ப்பெருக்கின் ஓட்டத்தை அணைகட்டித் தேக்கினனும் கம்பன் என்கின்ற, கவிகளை மராமத்துப் பார்க்கும் 'எஞ்சினியர்.' அப்படித் தேக்கிய அந்தக் கவி வெள்ளத்தைப் பல நல்ல வாய்க்கால்கள் வழியாகப் பாசனத்துக்குப் பாய்ச்சி, உலகம் கண்டறியாத அழகு வாய்ந்த இலக்கியப் பூங்காவனத்தை உண்டாக்கினன் கம்பன்—என்பது அடியிலுள்ள செய்யுள்.

கரையறியாக் காட்டாற்று வெள்ளம் போலக்
கவிபொழிந்து வான்மீகி உலகுக் கீந்தத்
திரையறியா ஓட்டத்தைத் தேக்கிக் கட்டித்
திறமிகுந்த கால்வாய்கள் செய்து பாய்ச்சித்
தரையறியா இலக்கியக்கா வனத்தைத் தந்தான்
தனிப் புலமைக் கம்பனெனும் கவிதைத் தச்சன்
உரையறியாப் பயனளிக்க உதவும் பாட்டை
உலகமெலாம் அனுபவிக்க உழைப்போம் வாரீர்.

நந்தவனத்திலுள்ள பலவிதமான மலர்களையும் சேகரித்து, மணமுள்ள பச்சிலைகளையும், வெட்டிவேர், விளாம் பிச்சிவேர் ஆகிய வாசனையுள்ள வேர்களையும் சேர்த்து, ஒரு பெரிய பூப் பொதியை வான்மீகி முனிவர்

கொடுத்தாராம். அதைக் கம்பர் அவிழ்த்துப் பார்த்த போது, அதில் மிக நல்ல மலர்களும் பச்சிலைகளும் வேர்களும் இருந்ததோடு குப்பை, கூளம், முட்களும் கிடந்தனவாம். மலர்களையும் பச்சிலைகளையும் இனவாரியாக எடுத்துச் சேர்த்து, இடையே கிடந்த மண், கல், முட்கள் எல்லாவற்றையும் நீக்கிச் சுத்தப்படுத்தி, மலர்களை ஒரு மணம் மிகுந்த அழகான மாலையாகத் தொடுத்து உலக மாதாவுக்கே சூட்டிவிட்டானும் கம்பன்—என்பது அடுத்த செய்யுளின் கற்பனை:

**வனத்திலுள்ள மலர் வகைகள் எல்லாம் கொய்து**
**வாசனைவேர் பச்சிலைகள் பலவும் சேர்த்துக்**
**கனத்த ஒரு பூப்பொதியாமி ராமன் காதை**
**வான்மீகி யெனும்தவசி கட்டோ டீந்தான்;**
**இனத்தை யெல்லாம் ஆய்ந்தறிந்து இணைத்துக் கோர்த்து**
**இடைக்கிடந்த மாசுமறு யாவும் நீக்கித்**
**தனித்த மணம் அறம்திகழும் மாலை யாக்கித்**
**தரணிக்கே சூட்டிவைத்தான் கம்பன் தானே.**

மூவாசைகளையும் வென்ற தவசியான வான்மீகி முனிவர், அவர் தவம் செய்துகொண்டிருந்த வனத்தில் கிடைத்த ஒரு பலாப்பழத்தைக் கொண்டுவந்து கொடுத்தாராம். அந்தப் பழம் நீண்டதாகவும் பருமனாகவும் முள் அடர்ந்ததாகவும் இருந்ததாம். ஆனால், நாவில் நீர் ஊறும்படியான பரிமள வாசனையுள்ளதாக இருந்ததாம். கம்பன் அந்தப் பழத்தின்மீது படிந்த பிசினை அகற்றிவிட்டுப் பழம் கசங்காதபடி மெள்ளக் கீறிச் சுளைகள் அறுந்து போகாதபடி அலுங்காமல் எடுத்து அவைகளுக்குத் தன் சொந்தச் சரக்கான தேனும் வார்த்து, கற்றறிந்த அறிஞர்கள் ரசிக்கும்படி விருந்து செய்தானும்—என்பது அடுத்த செய்யுளின் கற்பனை.



**மால் கடிந்தத் தவமுனி வான் மீகிஎன்பான்**
**வனத்திடையே தான்கண்டு கொண்டுவந்த**
**பால் படிந்து, முள்ளடர்ந்து, பருத்து நீண்டு**
**பரிமளிக்கும் பலவின்கனி பாருக்கீந்தான்;**
**மேல்படிந்த பிசினகற்றி, மெள்ளக் கீறி,**
**மெதுவாகச் சுளை எடுத்துத் தேனும் வார்த்து**
**நூல்படிந்த மனத்தவர்க்கு விருந்து வைத்தான்**
**கம்பனென்ற தமிழ்த்தாயார் நோற்ற மைந்தன்.**

இப்படியாகத் தமிழ் மொழிக்குத் தனிச்சிறப்புண்டாக்கிய கம்பனை மனமாரப் புகழத்தானே வேண்டும்.

தமிழ்மொழி தனக்கொரு தவச்சிறப்பைத்
தந்தது கம்பனின் கவிச் சிறப்பே
'அமிழ்தம் தமிழ் மொழி' என்பதுவும்
அழியா திருப்பதும் கம்பனதாம்
கம்பனை மறந்தால் தமிழ் ஏது?
கவிதை என்பதும் கமழாது.
அம்புவிக் கவிஞருள் அரசாகும்
அவனே தமிழ் மொழிப் பரிசாகும்
கற்பனை சிறந்தது கம்பன் சொல்
கலைத்திறம் நிறைந்தது கம்பன் சொல்
அற்புதச் சித்திரம் அவன் பாட்டு
அறிவுக் கினிப்பது அவன் பாட்டு
சத்தியம் மிளிர்வது கம்பன் சொல்
சாந்தியைத் தருவது கம்பன் சொல்
நித்தியம் பெற்றது அவன் வாக்கு
நிந்தனை யற்றது அவன் வாக்கு.
இயல்பாம் வழிகளில் கதை பேசி
இசைமிகும் மொழிகளில் கவி வீசி
நயமிகும் நாடகம் நடப்பதுபோல்
நாவலர் வியந்திடத் தொடுபவனும்

சாதியை மதங்களை மறந்திடவும்
சமரச உணர்ச்சிகள் நிறைந்திடவும்
நீதியை அறங்களை நினைப்பூட்ட
நிரந்தரக் களஞ்சியம் அவன் பாட்டு

'கன்னித் தமிழ்' எனும் பெருமை யெலாம்
கம்பன் கவிதையின் அருமையினுல்
இன்னெரு கம்பனும் வருவானே
இப்படி யும்கவி தருவானே?

என்றெல்லாம் புகழச் செய்கிறது கம்பன் காவியத்தை ஆராய்ந்து அனுபவிக்கும்போது. இதுவரையிலும் பொதுவாகக் கம்பனுடைய கவித்திறத்தைப் பற்றியும், கம்பன் பாடிய இராமாயணம், முதல் நூலாகிய வான்மீகி இராமாயணத்தில் பல மாறுதல்களைச் செய்து தெய்வமாக்கதையைப் புனிதப்படுத்தி யிருப்பதைப் பற்றியும் சொல்லப்பட்டது.

கம்பராமாயணம் வான்மீகி இராமாயணத்திலிருந்து எப்படி யெல்லாம் வேறுபட்டிருக்கிறது என்பதை முன்னமே வெளியாகியுள்ள, 'கம்பரும் வான்மீகரும்' என்ற ஆராய்ச்சி நூலில் கண்டுகொள்ளலாம்.

இனி 'கம்பன் கவிதை இன்பக் குவியல்' என்ற இந்நூலின் தலைப்புக்கான ஆராய்ச்சியைச் செய்வோம்.

# இராமன் தசரதனுடைய உயிர்

இராமனைத் தசரதனுடைய உயிராக உவமிக்கிருன் கம்பன். நெடுங்காலம் மகப் பேறில்லாமல் இருந்த ஒரு தந்தை, அருமையாக பிறந்து சகல குணச் சம்பன்னனுன மகனைத் தன் உயிராகப் போற்றுவது இயல்புதான்.

ஆனுல், இந்த உவமையைக் கம்பன் எவ்வளவு ஞாபக சக்தியோடு தொடர்கிருன் என்பதும், எவ்வளவு பொருத்தமானபடி அமைக்கிருன் என்பதும் மிக்க வியக்கத்தக்கது.

தசரத மன்னன், நெடுங்காலம் புத்திரப் பேறில்லாமல் கவலைப்பட்டுக் குல குருவாகிய வசிட்டரிடம் குறை சொல்லிக்கொள்ளுகிருன். வசிட்டர் தமது ஞானக் கண்ணுல் ஆராய்ந்து புத்திர காமேஷ்டி யாகம் செய்தால் புத்திர பாக்கியம் உண்டாகும் என்று பணித்தார்.

அந்த யாகத்தைச் செய்து முடித்ததால் இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்னன் ஆகிய நான்கு புத்திரர்கள் பிறந்தார்கள். அந்த நால்வரிலும் மூத்தவனுகிய இராமனை,

காவியும் ஒளிர்தரு கமலமும் எனவே
ஓவிய எழிலுடை ஒருவனை யலதோர்
ஆவியும் உடலமும் இலதென அருளின்
மேவினன் உலகுடை வேந்தர்தம் வேந்தன்

குவளை மலரும் ஒளி வீசுகின்ற தாமரை மலரும் சேர்ந்ததுபோலும் சித்திரம் போலும் அழகுடையவனுன ஒப்பரிய இராமனைத் தவிர தனக்கு வேறு உடலோ

உயிரோ இல்லையெனப் போற்றி வந்தான் அரசர்களுக்கெல்லாம் அரசனுன தரசன்—என்பது கருத்து.

இந்தச் செய்யுளுக்குப்பின் இருபத்திரண்டு செய்யுட்கள் கடந்து இந்த 'உயிர்' என்ற உவமையைத் தொடர்கின்ற அழகைப் பாருங்கள்:

இராமன், அரசகுமாரன் கற்கவேண்டிய சகல கலைகளிலும் வல்லமையுள்ள வாலிபனுக விளங்கி வரும் காலத்தில், விசுவாமித்திர முனிவர் தசரதனுடைய சபைக்கு வருகிறார்.

மிகப் பெரிய தவசியாகிய அவரைத் தசரதன் உரிய மரியாதையுடன் வரவேற்று வணங்கி ஆசனமளித்து உபசரிக்கின்றுன்.

''முனிவர் பெருமானே! தேவரீர் இங்கே எழுந்தருளப் பெற்ற இப்பெரும் பாக்கியம் இந்த நாட்டு மக்கள் செய்த தவத்தாலோ அல்லது நான் செய்த தவத்தாலோ அன்று. என்னுடைய முன்னேர்கள் செய்த தவங்களின் பயனேயாகும்'' என்றுன், தசரதன்.

இது, 'முனிவரே! என்ன காரியமாக வந்தீர்கள்?' என்று கேட்பதற்கு ஈடான விநயமான வாசகம்.

முனிவரும் விநயமான முறையில் வந்த காரியத்தைச் சூசகமாகச் சொல்லுகிறார்.

''அரசே! என்போன்ற முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் ஒரு துன்பம் வந்தால் நாங்கள் அதைத் தீர்த்துக்கொள்ள பரமசிவனிடமோ அல்லது நாராயணனிடமோ அல்லது பிரம்மனிடத்திலோ அல்லது இந்திரனிடத்திலோ கடைசியாக இந்த அயோத்திமா நகர மன்னனிடமோ முறையிட்டுக் கொள்வதை விட்டால் வேறு புகலிடம் ஏது? அதுமட்டுமல்ல; அந்த இந்திரனே



தன் இந்திரப் பதவியைச் சம்பராசுரனிடம் பறிகொடுத்துவிட்டு, உன்னிடம் முறையிட்டுக்கொள்ள, நீ போய் அந்தச் சம்பராசுரனைக் குலத்தோடு ஒழித்துவிட்டு மீட்டுக்கொடுத்த பதவியல்லவா இன்றைக்கு இந்திரன் வகித்து வருவது?'' என்றுர், விசுவாமித்திரர்.

இந்தப் புகழ்ச்சியைக் கேட்ட தசரதன் கரைகாணுத மகிழ்ச்சியடைந்து, முனிவருக்கு ஏதோ இடையூறு வந்து அதற்கு உதவி நாடி வந்திருக்கிறுர் என்பதை அறிந்துகொண்டு, கரங் குவித்து வணக்கத்துடன், ''நான் செய்ய வேண்டியது என்ன? அருள்கூர்ந்து உத்தரவிடுங்கள்'' என்றுன்.

முனிவர் சொல்லுகின்றுர்:

**தருவனத்துள் யானியற்றும்தவ வேள்விக்**
**கிடையூருய்த் தவம் செய்வோர்கள்**
**வெருவரச் சென்று அடைகாம வெகுளியென**
**நிருதர் இடைவிலக்கா வண்ணம்**
**செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர்**
**நால்வரினும் கரிய செம்மல்**
**ஒருவனைத் தந்திடுதியென உயிரிரக்கும்**
**கொடுங்கூற்றின் உளையச் சொன்னுன்.**

''வனத்திலே நான் செய்யும் தவத்தையும் யாகத்தையும் அரக்கர்கள் வந்து கெடுத்துவிடாதபடி, யுத்தம் செய்து, அவர்களை வென்று, என் யாகத்தைக் காக்கச் சொல்லி உன் புதல்வர்கள் நால்வரிலும் கரியவனும் சிறப்புள்ளவனுமான இராமனை எனக்குத் தரவேண்டும்'' என்று உயிரைக் கொடுக்கும்படி கேட்கின்ற எமனைப் போல் துயரம் உண்டாகும்படிச் சொன்னுன், விசுவாமித்திர முனிவன்.

இதில், இராமன் தன்னுடைய உயிர் என்ற உவமையின் தொடர்ச்சி குறிப்பிடத்தக்கது.

அடுத்த செய்யுளில்:

**எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்**
**மருமத்தில் எறிவேல் பாய்ந்தப்**
**புண்ணிலாம் பெரும்புழையுட் கனல்நுழைந்தால்**
**எனச் செவியிற் புகுதலோடும்**
**உள்ளிலாவிய துயரம் பிடித்துந்த**
**ஆருயிர் நின்று ஊசலாடக்**
**கண்ணிலான் பெற்று இழந்தான் எனவுழந்தான்**
**கடுந் துயரம் காலவேலான்.**

எண்ணற்ற அரிய தவங்களைச் செய்துள்ள விசுவாமித்திரர் சொன்ன சொல், மார்பில் பகைவன் எறிந்த வேலினுல் உண்டான புண்ணில்—பெரிய துவராத்தில் கொள்ளிக்கட்டையைச் செருகினதுபோல், மனதில் மிகுந்த துயரம் பிடித்துத் தள்ள, அருமையான உயிர் வெளியே போவதும் வருவதுமாக ஊசலாட, கண்ணில்லாத பிறவிக் குருடன் கண்ணைப் பெற்று உடனே அதை இழந்துவிட நேர்ந்தால் என்ன துயரத்தை அடைவானே அப்படித் துயரடைந்தான், தசரதன்.

இதில், தன் உயிராகிய இராமனை விசுவாமித்திரருடன் அனுப்புவதா வேண்டாமா என்று மனம் தவிப்பதை உயிர் ஊசலாடுவதாகச் சொல்லப்படுகிறது.

இராமன், தசரதருடைய உயிர் என்ற உவமை இங்கும் காணப்படுகிறது.

இராமனைப் பிரிய மனம் வராத தசரதன் மாபெரும் தவசியாகிய விசுவாமித்திரருக்கு மறுப்புச் சொல்ல அஞ்சி, ''முனிவரே! அரக்கர்கள், தாங்கள் நடத்தும் யாகத்துக்கு இடையூறு செய்யாதபடி அவர்களை யுத்தம் செய்து ஒழிக்க வேண்டும் என்பதுதானே தங்கள் கட்டளை? இதற்கு இராமன் எதற்கு? அவன் சிறுபிள்ளை. யுத்தப் பயிற்சியே இல்லாதவன். எழுந்திருங்கள், நான் வருகிறேன், போகலாம். அந்தப் பரமசிவன், பிரமதேவன், இந்திரன் முதலானவர்களே வந்து யாகத்துக்கு இடையூறு செய்தாலும், அவர்களை முறியடித்து யாகத்தை நான் காக்கிறேன்'' என்ருன்.



இதைக் கேட்டவுடனே விசுவாமித்திரருக்குக் கடுங் கோபம் வந்துவிட்டது. புருவம் நெற்றியில் ஏறக் கண்கள் சிவந்து, கனல் வீசக் கோபச் சிரிப்புடன் ஆசனத்தை விட்டு எழுந்துவிட்டார். மாபெரும் தபோபலம் உள்ளவர். வெகு கோபக்காரர். என்ன சாபமிட்டு விடுவாரோ என்று எல்லோரும் நடுங்கிவிட்டார்கள்.

அதைக் கண்ட தசரத குலகுருவாகிய வசிட்டர், விசுவாமித்திரர் இராமனை அழைத்துச் செல்வதன் நோக்கம் என்ன என்பதை உய்த்துணர்ந்து விசுவாமித்திரரிடம் பொறுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டு தசரதனைப் பார்த்து, ''அரசே! இராமனுக்கு வேறு எவராலும் புகட்ட முடியாத வித்தைகளும் சிறப்பும் வரக்கூடிய நல்ல காலம் வந்திருக்கிறது. அதைத் தடுக்க வேண்டாம். அவனை விசுவாமித்திரருடன் அனுப்புங்கள்'' என்ருர்.

குருவின் ஆணையை உடனே ஒப்புக்கொண்டு பணியாட்களை அனுப்பி இராமனை அழைத்துவரச் செய்தான் மன்னன். இராமனும், அவனை விட்டுப் பிரியாத இலக்குவனும் வந்தார்கள்.

அவர்களை முனிவரிடம் ஒப்படைத்துத் தசரதன், ''என் தந்தை போன்ற முனிவரே! இதோ இவர்களுக்குத்

தந்தையும் தாயும் தாங்கள்தாம். அவர்களைக் கொண்டு தங்களுக்கு ஆகவேண்டிய காரியங்களை முடித்துக்கொள் ளுங்கள்'' என்ருன்.

பெருமகிழ்ச்சியடைந்த விசுவாமித்திரர் தசரதனை வாழ்த்திவிட்டு இராமனையும் இலக்குவனையும் கூட்டிக் கொண்டு போகிருர்.

இராமன், தம்பியுடன் விசுவாமித்திரருடைய நிழல் போல் பின் தொடர்ந்து அயோத்திமாநகரின் மதிலைக் கடந்து போகிறன். எதுபோல் போகிருன் பாருங்கள்.

**அன்ன தம்பியும் தானும் ஐயனும்**
**மன்னன் இன்னுயிர் வழிக்கொண்டால் எனச்**
**சொன்ன மாதவற் ருெடர்ந்த சாயைபோல்**
**பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினன்.**

இராமன், தம்பி இலக்குவனுடன் விசுவாமித்திர ருடன் நிழல்போல் அவரைப் பின்பற்றித் தந்தையாகிய தசரதனுடைய இன்னுயிர் வெளியேறிவிட்டது போல், அழகான அயோத்தி மாநகரத்தின் மதிலைவிட்டு வெளி யேறினன்.

இங்கே, இராமன் தசரதனுக்கு உயிர் என்ற உவமை தொடர்வது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பாட்டுக்குப் பின்—சுமார் நானூற்றைம்பது (450) கவிகளுக்குப் பின் இந்த உவமையை அழகான முறையில் பொருத்தப்பட்டிருக்கிறது என்பதைப் பாருங்கள்.

இராமனையும் இலக்குவனையும் விசுவாமித்திரரிடம் ஒப்படைத்த கதைப் பகுதி 'கையடைப் படலம்.' அதற் குப்பின் 'வேள்விப் படலம்', 'மிதிலைக் காட்சிப் படலம்', 'குலமுறை கிளத்து படலம்', 'கார்முகப்படலம்', 'வரைக் காட்சிப் படலம்', 'பூக்கொய் படலம்', 'நீர் விளையாட்டுப்



படலம், 'உண்டாட்டுப் படலம்' என்ற எட்டுப் படலங் களில் எத்தனையோ கற்பனைகளையும் கருத்துக்களையும் பாடிய கம்பன் அடுத்த எதிர்கோள் படலத்தில் 'இராமன் தசரதனுடைய உயிர்' என்பதைத் தொடர்ந்திருக்கும் ஞாபக சக்தி, அசாதாரண அற்புதம்.

நிகழ்ச்சிகளைத் தொடர்வோம்:

அயோத்தியைவிட்டு விசுவாமித்திரர், இராம இலக் குவர்களுடன் யாகம் செய்யும் வனத்துக்குப் போகிருர். வழியில் தாடகை என்னும் அரக்கி எதிர்ப்படுகின்ருள். இந்தத் தாடகையும் இவளுடைய மக்கள் சுபாகு, மாரீசன் ஆகிய மூவரும்தான் விசுவாமித்திரருடைய யாகத்துக்கு இடையூறு செய்து வருகிறவர்கள். முனிவர் தாடகையைக் கொல்லும்படி இராமனிடம் சொல்லு கிருர். இராமன், ஒரு பெண்ணைக் கொல்லுவது அற மல்லவே என்று தயங்குகிருன். முனிவர் தாடகையின் வரலாற்றையும் அவளுடைய தீய குணங்களையும் விவரித் துப் பெண்ணென்று தயங்காமல் கொல்லவேண்டியதே அறம் என்று சொல்லுகிருர். இதற்குள் தாடகையே போர் தொடுத்து, இராமன்மீது ஒரு சூலாயுதத்தை வீசினள். இராமன் தன் பாணத்தால் அந்தச் சூலா யுதத்தைப் பொடியாக்கிவிட்டுப் பின் தாடகையையும் ஒரே பாணத்தால் கொன்றுவிடுகிருன்.

முனிவருடைய ஆசிரமத்துக்குப் போய் அங்கே முனிவர் வேள்வி தொடங்குகிருர். இராமனும் இலக்கு வனும் வேள்வியைக் காத்து நிற்கின்றனர். சுபாகு, மாரீசன் இருவரும் வேள்வியைக் கெடுக்க வருகின்றனர். அவர்களுடன் போர் தொடுத்து, இராமன் பாணத்தால் சுபாகு கொல்லப்படுகிருன். வேருெரு பாணத்தால் மாரீசன் கடலிற் கொண்டுபோய்த் தள்ளப்படுகிருன்.

வேள்வி இனிதே முடிகின்றது. முனிவர் இராமனைப் புகழ்ந்து பாராட்டுகின்றார். ''இன்னும் நான் செய்யக் கூடிய பணி இருந்தால் சொல்லுங்கள்'' என்கிறான் இராமன். ''இப்போதைக்கு நீ செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. பின்னால் நீ செய்யவேண்டிய பெரிய காரியம் இருக்கிறது. அதை அப்போது பார்த்துக்கொள்ளலாம். மிதிலையில் சனக மகாராசன் ஒரு வேள்வி செய்கிறானாம். அதை நாம் பார்த்து வரலாம்'' என்றார்.

அதன்படி மிதிலைக்குப் போனார்கள். போகும் வழியில் இராமனுடைய பாதத் தூளி பட்டுக் கல்லாய்க் கிடந்த அகலிகை சாபம் நீங்கிச் சுயரூபம் அடைகிறாள். இராமன் வியப்படைகிறான். முனிவர், அகலிகைக்குச் சாபம் வந்த வரலாற்றைச் சொல்லிவிட்டு, அகலிகையையும் கூட்டிக் கொண்டு, அகலிகையின் கணவரான கௌதமருடைய ஆசிரமத்துக்குச் சென்று அகலிகையை அவரிடம் சேர்த்துவிட்டு மிதிலைக்குப் போகிறார்கள்.

அங்கே சீதையின் சுயம்வரம் நடக்கப்போகிறது. முனிவரும் இராமனும் இலக்குவனும் மிதிலாபுரி இராஜ வீதியில் போய்க்கொண்டிருந்த சமயத்தில் சீதை அரண்மனையின் மேல்மாடத்தில் தோழிகளோடு நின்றுகொண்டு வீதியை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

அப்படி நின்றுகொண்டிருந்த அற்புத அழகியான சீதையை இராமன், பார்க்கிறான். அதே சமயத்தில் சீதையும் இராமனைப் பார்க்கிறாள். கண்டதும் காதலாக அந்தக் கணத்திலேயே ஒருவர் உள்ளத்தில் ஒருவர் புகுந்துகொண்டனர். இராமன் கண்ணுக்கு மறைகிற வரைக்கும் சீதை அவனையே பார்த்துக்கொண்டிருந்து, அவன் மறைந்தவுடன் காம நோயால் மயங்கிவிடுகிறாள். அதைக் கண்ட சேடியர் சீதையைப் படுக்கைக்குக் கொண்டு போகிறார்கள்.



சீதையைப் பார்த்து மையல் கொண்டுவிட்ட இராமன், மறுமுறை அவளைப் பார்க்க முடியவில்லை. ஏனெனில், விசுவாமித்திரர் முன்னாலும் இலக்குவன் பின்னாலுமாக நடந்துகொண்டே அரண்மனைக்கு அருகில் வந்தபோது அவளைப் பார்த்தவன், அந்த இடத்தைக் கடந்தபின் திரும்பி நின்று ஒரு பெண்ணைப் பார்ப்பது ஒழுக்கக் குறைவானது என்றும், அப்படிப் பார்ப்பதை தம்பியோ முனிவரோ கவனித்துவிட்டால் தன்னைப்பற்றிக் குறைவாக எண்ணுவார்களே என்றும் திரும்பிச் சீதையை பார்க்கவில்லை. ஆனால், மனதிற் பதிந்துவிட்ட சீதையின் வடிவழகையே எண்ணிக்கொண்டு போனான்.

அன்றிரவு சீதையும் தூங்க முடியவில்லை. இராமனும் தூங்க முடியவில்லை. விரகதாபத்தால் துன்புற்றுக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் விசுவாமித்திரர் இராமனையும் இலக்குவனையும் அழைத்துக்கொண்டு சனகனுடைய சபைக்குப் போகிறார். சபைக்கு வந்து அமர்ந்த சனகன், அங்கிருந்த இராமனையும் இலக்குவனையும் பார்த்து அவர்களுடைய அழகில் மயங்கி, முனிவரைப் பணிந்து, ''இந்தக் குமாரர்கள் யார்?'' என்று கேட்கிறான்.

முனிவர், தசரதனுடைய முன்னோர்களின் சிறப்பை விவரித்து, குலப் பெருமையை விளக்கிவிட்டுத் தசரதன் செய்த புத்திரகாமேட்டி யாகத்தால் இராமனும் அவனுக்கிளைய மூவரும் பிறந்த வரலாற்றை விவரிக்கிறார். அதன் பின் தன்னுடைய யாகத்தைக் காக்க இராம இலக்குவனரை அழைத்து வந்ததையும், வழியில் இராமன் தாடகையைக் கொன்றதையும் அவளுடைய புத்திரர்களாகிய சுபாகு மாரீசன் இருவரையும் வென்று யாகத்தைக் காத்ததையும், அதன் பிறகு மிதிலைக்கு வரும்-வழியில் இராமனுடைய பாததூளி பட்டவுடன் சாபத்-

தால் கல்லாய்க் கிடந்த அகலிகை தன் சுய வடிவம் அடைந்ததையும் சொல்லிவிட்டுக் கடைசியாக, "என் உயிர்மேல் எனக்குள்ள ஆசையைக் காட்டிலும், இந்த இராமன்மேல் எனக்கு அதிக ஆசையுண்டு" என்றார்.

இந்த வரலாற்றைக் கேட்ட சனக மகாராசன், இராமனுடைய அழகையும் மற்றச் சிறப்புகளையும் கருதி "ஐயோ! இப்படிப்பட்ட சிறப்புகளுள்ள இந்தக் குமாரனுக்கு உடனே சீதையைக் கொடுத்துவிட முடியாமல், சிவன் கையாண்ட வில்லை வளைத்து நாணேற்றுகிறவனுக்குத்தான் கொடுப்பது என்று விரதம் மேற்கொண்டு விட்டேனே" என்று தனக்குள் வருந்தினான். அதையுணர்ந்த குலகுரு சதானந்தர், சீதை, நிலத்தை உழுதபோது கொழுமுனையில் பூமியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட வரலாற்றையும் அவளுடைய தெய்வீக அழகையும் மற்றச் சிறப்புகளையும் சொல்லிவிட்டுப் பரமசிவன் கையாண்டதும், நெடுங்காலமாகத் தம் வசம் இருந்து வருவதுமான வில்லை வளைத்து நாணேற்றுகிற வல்லமை உள்ளவனுக்குத்தான் அவளை மணம் செய்விப்பதாக உள்ள விரதத்தையும் சொல்லி, எண்ணிறந்த அரசகுமாரர்கள் வந்து வில்லை அசைக்கவும் முடியாமற் போய்விட்டதையும் சொன்னார். கடைசியாக, "இந்தக் குமாரன் அந்த வில்லை நாணேற்றிவிட முடியுமானால், எங்கள் சீதையின் அழகு வீண் போகாது' என்றும் சதானந்தர் விசுவாமித்திரரிடம் சொன்னார்.

வில்லைக் கொண்டுவர உத்திரவிடப்பட்டது. வில்லை எண்ணிறந்த மல்லர்கள் சுமந்து சபைக்குக் கொண்டு வந்து கிடத்தினார்கள். விசுவாமித்திரர், சதானந்தர் சொன்னதை யெல்லாம் மனத்திற்கொண்டு இராமனுடைய முகத்தைப் பார்த்துத் தலையை அசைத்தார். அதன் குறிப்பை அறிந்துகொண்ட இராமனும் தன்னம்



பிக்கையோடு அந்த வில்லைப் பார்த்தான். சபையோரெல்லாம் இராமனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

குபீரென எழுந்தான், இராமன். வில்லை அணுகி அதை ஒரு பூமாலையைப்போல் வெகு அநாயாசமாக எடுத்து நிறுத்தி நாணேற்ற வளைத்தான். அவனுடைய வலிமைக்கு ஆற்றாத அந்த வில் படீரென ஒடிந்து விட்டது. சனகன் உட்பட அங்கிருந்த எல்லாரும் ஆனந்தப் பரவசமடைந்து விட்டார்கள்.

இராமன் சீதைக்கு மணமகனாகிவிட்டான். உடனே சனகன் விசுவாமித்திரரைப் பார்த்துத் திருமணத்தை "உடனே நடத்திவிடலாமா அல்லது தசரதனும் வரவேண்டுமா" என்று கேட்டார். தசரதரும் வந்துதான் திருமணம் நடக்கவேண்டும் என்று சொல்லி விட்டார்; முனிவர்.

தசரதருக்குத் தூதர்கள் மூலமாக ஓலை அனுப்பப்படுகிறது. மகனுடைய வில்லாற்றலைக் கேள்வியுற்ற தசரதன் பேரானந்த மடைந்து, உடனே பரிவாரங்களையும் நகர மக்களையும் மிதிலைக்குப் பயணமாகும்படி பறைசாற்ற உத்தரவிடுகிறான், நகர மக்களும் பரிவாரங்களும் முன் செல்லக் கடைசியாகத் தசரதனும் கோசலை, கைகேசி, சுமித்திரை ஆகிய மூன்று மனைவிகளும் பரதனும் சத்துருக்நனும் போகிறார்கள்.

தசரதன் வருகையை அறிந்த சனகன் தசரதன் மிதிலைக்குள் வருவதற்கு முன்னாலேயே அவனை எதிர்கொள்ளப் பரிவாரங்களுடன் வருகின்றான். அந்தக் கூட்டத்தோடு இராமனும் இலக்குவனும் தந்தையை எதிர்கொள்ள வருகிறார்கள். இராமன் தசரதனை அடைந்தான். எப்படி அடைந்தான் பாருங்கள்:

**காவியும் குவளையும் கடிகொள் காயாவும் ஒத்து**
**ஓவியம் சுவைகெடப் பொலிவதோர் உருவொடே**
**தேவரும் தொழுகழல் சிறுவன் முன் பிரிவதோர்**
**ஆவிவந் தென்னவந்து அரசன்மாடு அணுகினன்.**

நீலோற்பலமும் குவளை மலரும் மணமிகுந்தக் காயாம்பு மலரும் ஒத்துச் சித்திரமும் தோற்றுவிடும் அழகுடன் தேவர்களும் விழுந்து வணங்கும் பாதங்களுள்ள மகனுகிய இராமன், முன் பிரிந்துபோன தசரதனுடைய உயிர் வந்து சேர்ந்து விட்டதுபோல் தசரதனை நெருங்கினன்.

முன்னே தசரதனுடைய உயிர் எப்படிப் பிரிந்தது என்பதை நினைப்பூட்டிக் கொள்வோம்:

**அன்னதம்பியும் தானும் ஐயனும்**
**மன்னன் இன்னுயிர் வழிக்கெண்டால் எனச்**
**சொன்ன மாதவற் றொடர்ந்த சாயைபோல்**
**பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினன்.**

இந்தச் செய்யுளுக்குப்பின் எட்டு படலங்களில் 450 கவிகள் பாடி வெவ்வேறு கருத்துக்களிலும் சூழ்நிலைகளிலும் கவன சக்தியைச் செலுத்திக்கொண்டிருந்த கம்பன், தசரதனை விட்டுப் பிரிந்துபோன அவன் உயிரை மீண்டும் அவனைச் சேரும்படிச் செய்திருக்கிற ஞாபகசக்தி அசாதாரண அற்புதம் அல்லவா? இப்படிச் செய்திரா விட்டால் தசரதன் உயிரற்ற உடலோடு தானே இராமனுடைய திருமணத்தில் கலந்துகொள்ள நேரும்.

'இராமன் தசரதனுடைய உயிர்' என்ற உவமையைக் கம்பன் மேலும் எப்படியெல்லாம் தொடர்கின்றான் என்பதைப் பாருங்கள்:

இராமனுக்கும் சீதைக்கும் திருமணம் நடந்த அதே சமயத்தில் சனகனுடைய தம்பி குசத்துவன் என்பவனுடைய பெண்கள் மாளவி, ஊர்மிளை, சுதகீர்த்தி என்ற மூன்று பேரையும் முறையே பரதன், இலக்குவன், சத்துருக்னன் ஆகிய இராமனுடைய தம்பிகளுக்கு மணமுடிக்கப்பட்டது.



இராமனுக்கும் சீதைக்கும் திருமணம் முடிந்ததும் விசுவாமித்திரர் தாம் இராமனைக் கூட்டிக்கொண்டு வந்த காரியங்கள் முடிந்துவிட்டதாகத் தவம் புரிய வடதிசை நோக்கிப் போய்விட்டார்.

தசரத மன்னன் மனைவிகள், மக்கள், மருமக்களோடுச் சில நாட்கள் மிதிலையில் இருந்துவிட்டு எல்லாரையும் கூட்டிக்கொண்டு அயோத்திக்குப் பயணமானன்.

இவர்களுடைய வருகைக்காகவே காத்திருந்த பரசுராமன் என்பவன், இராமனை வழிமறித்து, "ஏ! ராமா! நீ மிதிலையில் நெடுங்காலமாகக் கிடந்து உளுத்துப் போன ஒரு சொத்தை வில்லை ஒடித்துவிட்ட இறுமாப்படைந்திருக்கிறய். அந்த இறுமாப்பை அடக்கவும், உன் வல்லமையைச் சோதிக்கவும், அவசியமானல் உன்னுடன் போர் புரியவும் வந்திருக்கிறேன். எங்கே, மிதிலை வில்லை ஒடித்த நீ இந்த வில்லை வளைத்து நாணேற்று, பார்க்கலாம்'' என்று தன் கையிலிருந்த வில்லை நீட்டினன்.

பரசுராமன் கடந்த இருபத்தோரு தலைமுறையாக அரசர் குலமாகிய சத்திரியர்களைக் கருவருப்பதாகச் சபதம் பூண்டு அதன்படியே எண்ணிறந்தச் சத்திரியர்களைக் கொன்றவன். கடுந்தவம் புரிந்தவன். வெகு கோபக்காரன்—என்பதெல்லாம் தசரதனுக்குத் தெரியும். அதனல் பரசுராமனைக் கண்டவுடனே இராமனை அவன் என்ன செய்துவிடுவானே என்று தசரதனுக்கு நடுக்கம் வந்துவிட்டது.

அதனுல், பரசுராமன் இராமன் வலிமையைச் சோதிக்க வந்திருப்பதாகவும் அவசியமானுல் போர்புரிய விரும்புவதாகவும் சொன்னதைக் கேட்ட தசரதன்,

அவன் அன்னது பகரும் அளவையின் மன்னவன் அயர்வான்
புவனம் முழுதும் வென்று ஒரு முனிவர்க்கு அருள் புரிவாய்!
சிவனும் அயன் அரியும் அவர்; சிறுமானிடர் பொருளோ?
இவனும் எனது உயிரும் உனது அபயம் இனி' என்ருன்.

பரசுராமன் இராமனைப் பார்த்து அப்படிச் சவால் விட்டதைக் கேட்ட தசரத மன்னன் மிகவும் அச்ச மடைந்து பரசுராமனை வணங்கி, ''உலகம் முழுவதையும் வென்று ஒரு முனிவருக்குக் கொடுத்த வல்லமை யுடையவரே! பரமசிவனும் பிரமனும் இந்திரனுங்கூடத் தங்களை எதிர்த்து நிற்க முடியாதே. அப்படியிருக்க எங்களைப் போன்ற அற்ப மானிடர் தங்களுக்கு ஒரு பொருட்டா? பொறுத்தருளுங்கள். இந்த என் மகனும் என் உயிரும் தங்களுக்கு அடைக்கலம், காத்தருள வேண்டும்'' என்ருன்.

இதில், இராமன் தசரதனுடைய உயிர் என்ற உவமை தொடர்கிறது. இந்தச் செய்யுள் எதிர்கோள் படலத்தில்,

காவியும் குவளையும் கடிகொள் காயாவும் ஒத்து
ஓவியம் சுவைகெடப் பொலிவதோர் உருவொடே
தேவரும் தொழுகழல் சிறுவன் முன் பிரிவதோர்
ஆவிவந் தென்ன வந்து அரசன் மாடு அணுகினுன்.



என்ற செய்யுளுக்கு 120 செய்யுட்களுக்குப் பின்னுல் உள்ளது.

மேலும், தசரதன், பரசுராமனை வேண்டிக்கொள்கிற இன்னொரு செய்யுள்:

சலத்தோடு இயைவிலன் என்மகன் அனையான் உயிர் தபுமேல்
உலத்தோடு எதிர்தோளாய் எனது உறவோடு உயிர் உகுவேன்
நிலத்தோடு உயர் கதிர் வானுற நெடியோய் உனது அடியேன்
குலத்தோடு அற முடியேல் இது குறை கொண்டனென் என்ருன்

''கற்பாறையைப் போன்ற வலிமையுள்ள தோளாற்ற லுடையவரே! (பரசுராமா!) என் மகன் குற்றமற்றவன். தங்களுக்குப் பகைவன் அல்லன். அவன் இறந்தால் நானும் என் உறவினருடன் உயிரிழப்பேன். வையகமும் வானகமும் வணங்கத்தகுந்த பெரியோய்! நான் குலத்தோடு அழிந்துபோகும்படி செய்யவேண்டாம். தங்கள் அடிமையாகிய நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்'' என்ருன், தசரதன்.

இப்படியெல்லாம் சொல்லிக் காலில் விழுந்து கேட்டுக்கொண்ட தசரதனை இலட்சியம் செய்யாமல் பரசுராமன் கடுங்கோபத்துடன் இராமனை நெருங்கி மருட்டத் தொடங்கினுன். அதைக் கண்ட தசரதன், அரசர்களைக் கொல்லுவது ஒன்றே தன் தொழிலாக சபதம் பூண்டு எண்ணிறந்த அரசர்களைக் கொன்று விட்டப் பரசுராமன் இராமனையும் கொன்றிடுவான் என்ற அச்சத்தால் மூர்ச்சையாகிவிட்டான்.

பரசுராமன், தான் வந்த காரியத்தைத் தொடர்ந்து இராமனை மருட்டி, "இராமா! நீ மிதிலையில் சிவன் கையாண்ட வில்லை ஒடித்த ஓசையைக் கேட்டுத்தான் வந்தேன். எங்கே உனக்கு சாமர்த்தியம் இருந்தால் இதோ என் கையிலுள்ள நாராயணன் கையாண்ட இந்த வில்லை வளைத்து நாணேற்று பார்க்கலாம். இல்லாவிட்டால் போருக்கு வா" என்று சொல்லித் தன் கையில் இருந்த வில்லை இராமனிடம் நீட்டினான்.

இராமன் வேறொன்றும் சொல்லாமல் புன் முறுவலோடு அந்த வில்லை வாங்கி உடனே வளைத்து நாணேற்றி விட்டான். அதைக்கண்டு பரசுராமன் நடுங்கி விட்டான்.

நாணேற்றிய வில்லில் இராமன் பாணத்தைப் பூட்டித் தோளுற இழுத்துக்கொண்டு பரசுராமனைப் பார்த்து, "நீ அநேக அரசர்களைக் கொன்ற பாதகன். உன்னைக் கொல்லுவதில் குற்றமில்லை யென்றாலும் நீ வேதவித்தாகிய அந்தணனுடைய (சமதக்கினியுடைய) மகன். அந்தண குலத்தில் உதித்த உன்னைக் கொல்லுவது அறமல்ல வென்று விடுத்தேன். ஆனால், என்னுடைய பாணம் பலிகொள்ளாமல் விடாது. இந்தப் பாணத்துக்கு இரை என்ன? நீயே சொல்" என்றான்.

"நான் இதுவரையிலும் இயற்றியுள்ள தவங்களின் பலன்களெல்லாம் உன் அம்புக்கு இரையாகட்டும்" என்றான், பரசுராமன்.

அதன்படி பரசுராமன் செய்துள்ள தவங்களின் பலன்களையெல்லாம் பலி கொள்ளும்படி இராமன் அம்பை வில்லினின்று விடுவித்தான். பரசுராமன் இராமனை வணங்கி விடை பெற்றுக் கொண்டான். அவன் போனபின்,



**அழிந்து அவன் போனபின் அமலன் ஐயுணர்வு**
**ஒழிந்தனன் உயிர் உலைந்து உருகு தாதையைப்**
**பொழிந்த பேரன்பினால் தொழுது முன்பு புக்கு**
**இழிந்தவான் துயர்க்கடல் கரைநின்று ஏற்றினான்.**

பரசுராமன் தோல்வியுற்று அங்கிருந்து போனபின், தன்நினைவு இல்லாமல் உயிர்போய் விடும்போல அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த தந்தையை (தசரதனை) அணுகி, அன்புரைகள் சொல்லி வணங்கிச் சுய நினைவு வரச் செய்து, துயரக் கடலினின்றுக் கரையேற்றினான்.

இதில், தன் உயிராகிய மகனைப் பரசுராமன் கொன்று விடுவான் என்ற அச்சத்தினால் தசரதனுடைய உயிர் உலைகின்றது—என்பது குறிப்பிடத்தக்கது.

தசரதனும் மற்றவர்களும் அயோத்தியைச் சேர்கிறார்கள்.

பனிரண்டு ஆண்டுகளுக்குப் பின் தசரதன் அரசு பாரத்தை இராமனிடத்தில் ஒப்படைத்துவிட்டுத் தவம் செய்ய வனத்துக்குப்போக விரும்புகிறான். சபையைக் கூட்டித் தன் விருப்பத்தை மந்திரிகளிடமும் குலகுருவாகிய வசிட்டரிடமும் தெரிவித்தான். அரசனைப் பிரிய மனமில்லாவிட்டாலும், அவனுடைய விருப்பம் மிகவும் நியாயமானது என்பதனாலும் அரசனுக்குப் பின் நாட்டை ஆள மிகவும் தகுதியுடைய இராமன் இருப்பதனாலும், மந்திரிகளும் வசிட்டரும் தசரதன் விருப்பத்திற்கு இணங்கினார்கள். முதன் மந்திரி சுமந்திரர் உடனே இராமனுக்கு முடி சூட்டிவிட்டுப் பிறகு மன்னன் தவத்துக்குப் போகவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

உடனே, இராமனுக்கு முடிசூட்ட முகூர்த்தநாள் ஆராயப்பட்டு மறுநாளே நல்ல நாளாக இருப்பதாகச் சோதிடர் சொல்ல விழா நிச்சயிக்கப் பட்டது.

இதையறிந்த கைகேசியின் பணிப் பெண்ணுன கூனி மந்தரை, இராமனுக்கு முடிசூட்டும் விழா நடக்கக் கூடாதபடி சூழ்ச்சி செய்ய எண்ணினுன். உடனே கைகேசியிடம் சென்ருள். கைகேசி அப்போது தூங்கிக்கொண்டிருந்தாள். அவளுடைய பாதங்களைத் தீண்டி அவளை விழிக்கச் செய்தாள். கூனி, விழித்த கைகேசியைப் பார்த்து "தாயே! உனக்குக் கேடுகாலம் வந்துவிட்டதே அதை உணராமல் தூங்கிக் கொண்டிருக்கிருயே." என்ருள், கூனி.

அதைக் கேட்ட கைகேசி, "வீராதி வீரர்களாக அறநெறி வழுவாத நான்கு புத்திரர்களைப் பெற்றுள்ள எனக்கு என்ன கேடு வர முடியும்?" என்ருள்.

"ஆடவர்கள் சிரித்து ஏளனம் செய்யவும் ஆண்மைத் தன்மைக்கே பழிச்சொல் உண்டாக்கித் தாடகை என்ற ஒரு பெண்ணைப் போய்க் கொலை செய்து வந்தானே அந்த இராமனுக்கு நாளை முடிசூட்டப் போகிருர்களாம்" என்ருள் கூனி.

அதைக் கேட்ட கைகேசி எல்லையற்ற மகிழ்ச்சியடைந்து, அந்த மகிழ்ச்சியில் கூனி இராமனை இழித்துப் பேசினதையும் கவனிக்காமல், இராமனுக்கு முடி சூட்டப் போகிருர்கள் என்ற நல்ல சேதியைச் சொன்னதற்காக, ஒரு மிகப் பிரகாசமுள்ள விலையுயர்ந்த இரத்தின மாலையைக் கூனிக்குப் பரிசாகக் கொடுக்கிருள்.

அந்த மாலையை வாங்கிய கூனி வெறுப்புடன் அதை தரையில் ஓங்கி அடித்து எறிந்துவிட்டு மீண்டும் மீண்டும் பல நியாயங்களைச் சொல்லிக் கோசலைக்கு வாழ்வு வந்து விட்டதாகவும், கைகேசிக்குத் தாழ்வு வந்துவிட்டதாகவும் அதனுல் கைகேசி கோசலைக்கு அடிமையாகப் போவதாகவும், அந்த அடிமைக் கைகேசிக்குத் தான் அடிமையாக இருக்க நேர்ந்துவிட்டதே என்றும் வருந்துகிருள்.



அதைக் கேட்டு கசந்துவிட்ட கைகேசிக்குக் கடுங் கோபம் வந்து, "அடி மந்தரை! நீ எனக்கு நல்லது சொல்ல வந்தவளுமல்ல; என் மகன் பரதனுக்கு நல்லது சொல்ல வந்தவளுமல்ல. கெட்ட காலத்தால் ஏதேதோ வாய்க்கு வந்ததெல்லாம் உளறுகிருய். போய்விடு, என் முன் நிற்காதே! நீதியல்லாததும் நெறிமுறையல்லாதும் சொல்லுகிருய். போதும், அடக்கு" என்ருள்.

அதைக் கேட்டும் கூனி அஞ்சிவிடவில்லை. உடனே கைகேசின் காலில் விழுந்து, "தாயே! நீ என்னை எவ்வளவு கடிந்துகொண்டாலும் சரி, உனக்கு நன்மை வரக்கூடிய யோசனையைச் சொல்லாது விடமாட்டேன்" என்றும், இராமனுக்கு முடி சூட்டிவிட்டால் கோசலைக்கு வாழ்வும், கைகேசிக்குத் தாழ்வும் உண்டாவது மட்டுமல்லாமல், அரச காரியங்களிலும் செல்வாக்கு, இராமனுக்கு உகந்தவனுகவும் அவனுடன் இணைபிரியாது இருந்து வருபவனுமாகிய இலக்குவனுக்குத்தான் இருக்குமேயல்லாமல், பரதனுக்கு இருக்காது என்றும், மற்றும் சில நியாயங்களைச் சொல்லிவிட்டுக் கடைசியாக, "தாயே! நீ கெடுவது மல்லாமல் உன் தந்தைக்கும் தாய்க்கும் உன் பிறந்த வீட்டுக்கும் பிறந்த நாட்டுக்கும் அழிவுண்டாக்கத் துணிந்துவிட்டாயே" என்ருள், மந்தரை.

தந்தைக்கும் தாய்க்கும் பிறந்த வீட்டுக்கும் அழிவு என்பதைக் கேட்டவுடனே, இயல்பாகப் பெண்களுக்குப் பெற்ருேர் மீதும், பிறந்த வீட்டின் மீதும் உள்ள பாசத்தால் கைகேசி, இராமனுக்கு முடி சூட்டுவதால், தன் பெற்ருேருக்கும் பிறந்த வீட்டுக்கும் எப்படி அழிவு வரும் என்று திகைப்பதுபோல் காணப்பட்டாள்.

கூனியே அதை விளக்குகிருள். "தாயே! மிதிலை மன்னனுகிய சனகனுக்கும் உன் தந்தை கேகய நாட்டு மன்னனுக்கும் நெடுங்காலமாகப் பகை என்பது உனக்கும்

தெரியும். சனகன் உன் தந்தையை வென்றுவிடக்கூடிய வலிமையும் வசதிகளும் உள்ளவன். இதுநாள் வரையிலும் உன்மீது மிகுந்த காதலுள்ள உன் கணவர் தசரதர் இங்கே அரசனாக இருந்ததால் சனகன் உன் தந்தைமீது படையெடுக்கப் பயந்துகொண்டிருந்தான். இனி இராமனுக்குப் பட்டம் கட்டிவிட்டு உன் கணவர் காட்டுக்குப் போய்விட்டால், அச்சம் நீங்கிய சனகன் உன் தந்தைமீது படையெடுப்பான். அப்படிப் படையெடுத்தால் இராமன் தன் மாமனாராகிய சனகனுக்குப் பரிவு காட்டுவானா உன் தந்தைக்குப் பரிவு காட்டுவானா என்பதை நீயே எண்ணிப் பார். சனகன் மட்டுமல்ல. உன் தந்தைக்கு வேறு பகைவர்களும் உண்டு. இங்கிருந்து உதவி போகாது. அதனால் உன் பிறந்த வீட்டுக்கு அழிவு நிச்சயம்'' என்றாள், கூனி.

இதைச் சொன்னவுடனே, கைகேசியினுடைய தூய மனமும் மாறிவிட்டது. அதைச் சொன்னதற்காக மந்தரையைப் புகழ்ந்துவிட்டு இராமனுக்கு முடி சூட்டாமல் பரதனுக்கு முடி சூட்டும்படிச் செய்ய என்ன உபாயம் என்று கைகேசி மந்தரையைக் கேட்டாள்.

''அதற்கு மிக நல்ல வழி இருக்கிறது. நான் சொல்லுகிறபடி நீ செய்தால் நிச்சயம் பரதனே அரசனாவான். உன் கணவர் இந்திரனுக்கு உதவியாகச் சென்று சமபரன் என்ற அசுரனைக் கொன்ற போரில் நீ உன் கணவருடன் இருந்து அவருக்கு அபாயம் நேராதபடி உதவினாய் அல்லவா? அதற்காக உன் கணவர் உன்னைப் புகழ்ந்து உனக்குப் பிரியமான இரண்டு வரங்கள் தருவதாகச் சொன்னார். நீ இப்போது கேட்க வேண்டிய வரம் ஒன்றுமில்லை, தேவையானால் பின்னால் கேட்டு வாங்கிக் கொள்ளுவதாகச் சொல்லியிருக்கிறாய் அல்லவா? அந்த இரண்டு வரங்களையும் இப்போது கேட்டு வாங்கு. ஒரு



வரத்தில் பரதனுக்கு முடி சூட்ட வேண்டும் என்றும் இன்னொரு வரத்தில் இராமன் பதினான்கு வருடம் வனவாசம் செய்து வரவேண்டுமென்றும் கேள்'' என்றாள், மந்தரை.

இதைக் கேட்டுப் பெரு மகிழ்ச்சியடைந்த கைகேசி, நிச்சயமாக வெற்றி தரக்கூடிய இந்த உபாயத்தைச் சொன்னதற்காக மந்தரைக்கு ஏராளமான பரிசுகள் கொடுத்து வாழ்த்தியனுப்பினாள்.

அன்று இரவு தசரத மன்னன் வழக்கம்போல் தன் காதல் மனைவி கைகேசியின் மாளிகைக்கு வந்தான். அந்தப்புரத்தில் புகுந்தபோது கைகேசி அலங்கோலமாய்த் துவண்டு கிடப்பதைக் கண்டான். அதைக் கண்டு திகிலடைந்த மன்னன், மனைவியை வாரி எடுத்து ''என்ன காரணம்? யார் உனக்குத் தீங்கிழைத்தவர்கள் சொல்லு; அவர்களை என்ன செய்கிறேன் பார்'' என்றான்.

தன்னைத் தூக்கிய மன்னனுடைய கைகளை விலக்கிவிட்டு மறுபடியும் துவண்டு படுத்துக்கொண்டாள். மீண்டும் மீண்டும் மன்னன் அவளுடைய துயரத்துக்குக் காரணம் என்னவென்று கேட்டபின் கைகேசி, கண்ணீர் சிந்த அழுதுகொண்டே, ''என் மீது உங்களுக்கு அன்பிருப்பது உண்மையானால் முன்னே சம்பரனை வென்றபோது எனக்களித்த இரண்டு வரங்களையும் இப்போது கொடுங்கள்'' என்றாள்.

''அந்த வரங்களைக் கேட்கவா இவ்வளவு சங்கடம்? கேள், எது வேணுமானாலும் தருகிறேன்'' என்றான், மன்னன்.

''அந்த இரண்டு வரங்களில் ஒருவரம் என் மகன் பரதனுக்கு முடிசூட்ட வேண்டும் என்பது. இன்னொரு

வரம் இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்து விட்டு வரவேண்டும் 'என்பது' என்றாள் கைகேசி.

இதைக் கேட்டவுடனே நாகம் கொத்திவிட்டது போல் துடித்து மயங்கி விழுந்து, எழுந்து, விழுந்துப் புரண்டு நெடுநேரம் அல்லலுறுகின்றான். சற்றே மயக்கம் தெளிந்து ''அடி பாவி! இது நீயாகச் சொல்வதா அல்லது கெடு மதிக்காரர் சொல்லிக் கொடுத்துச் சொல்லுகிறாயா?'' என்றான், மன்னன்.

''எனக்கு யாரும் சொல்லிக்கொடுக்கவில்லை. நானாகத்தான் கேட்கிறேன். முன்னே நீங்கள் வாக்களித்தபடி இரண்டு வரங்களையும் கொடுத்தால் கொடுங்கள். இல்லாவிட்டால், சொன்ன சத்தியத்தைக் காப்பாற்றவில்லை என்ற பழியை உங்கள்மீது சுமத்தி விட்டு நான் இறந்துபோவேன்'' என்றாள்.

> இந்த நெடுஞ்சொல் அவ்வேழை கூறுமுன்னே
> வெந்த கொடும் புணில் வேல் நுழைந்தது ஒப்ப
> சிந்தை திரிந்து திகைத்து அயர்ந்து வீழ்ந்தான்
> மைந்தன் அவரது உயிர் வேறு இலாத மன்னன்.

இந்த வாசகத்தை அந்தக் கைகேசி சொல்லி முடிக்கு முன் ஏற்கனவே வெந்து போயிருந்த கொடிய புண்ணில் வேலாயுதத்தைக் குத்தினது போன்ற வேதனையடைந்து மனம் மயங்கித் திகைத்துச் சோர்ந்து விழுந்துவிட்டான், மகன் இராமனைத் தவிர வேறு உயிர் இல்லாத தசரதன்.

இதில், இராமனே தன் உயிர் என்று தசரதன் எண்ணி வந்தது வலியுறுத்தப்படுகிறது.

இந்தச் செய்யுளில் கம்பனுடைய அபூர்வமான கற்பனைத் திறனையும் உவமைகளைத் தொடர்கின்ற



ஞாபக சக்தியையும் காட்டுகின்ற இன்னொரு அழகும் அமைந்திருக்கிறது. அதை இங்கேயே அனுபவித்து ரசிப்போம்: இந்தச் செய்யுளில்,

> **வெந்த கொடும் புணில் வேல் நுழைந்தது ஒப்ப**
> **சிந்தை திரிந்து திகைத்து அயர்ந்து வீழ்ந்தான்**

என்று சொல்லப்படுகிறது. 'வெந்த கொடும் புண்' எது? எப்போது வெந்தது? 'வெந்த புண்' என்றது குருட்டுப் போக்கில் சொன்னது தானா? அன்று, அன்று. பாருங்கள்:

விசுவாமித்திர முனிவர் தான் செய்யும் தவ வேள்வியை அரக்கர் கெடுத்துவிடாதபடி காப்பதற்காக இராமனைத் தன்னுடன் அனுப்பும்படி கேட்டாரல்லவா? அப்படி அவர் கேட்டது:

> எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பிய சொல்
> மருமத்தில் எறிவேல் பாய்ந்த
> புண்ணில் ஆம் பெரும் புழையுள் கனல் நுழைந்தால்
> எனச் செவியில் புகுதலோடும்

எண்ணிக்கையில்லாத அருந்தவங்களைப் புரிந்துள்ள விசுவாமித்திரர் (இராமனைத் தன்னுடன் அனுப்பும்படி) கேட்டது, முன்பே மார்பில் பாய்ச்சிய வேலால் உண்டாகியிருந்த பச்சைப் புண்ணின் பெரிய துவாரத்தில் கொள்ளிக்கட்டையை நுழைத்ததுபோல் வேதனையை அதிகப்படுத்தியதனால்—என்று சொல்லப்பட்டது.

அதனால் முன்பே 'கனல் நுழைந்து வெந்திருந்த கொடும் புண்ணில் மீண்டும் வேலை நுழைத்ததுபோல் புண்ணின் வேதனையை மேலும் அதிகப்படுத்திவிட்டது— என்று 'எண்ணிலா அருந்தவத்தோன்' என்ற செய்யுளின்

கருத்தை மறவாமல் நினைவிற் கொண்டே இயற்றப் பட்டது. 'வெந்த கொடும் புணில் வேல் நுழைந்தது ஒப்ப? என்றது. 'எண்ணிலா அருந்தவத்தோன் என்ற செய்யுளுக்குப்பின் ஆயிரத்து இரு நூற்று ஐம்பத்தைந்து செய்யுட்களுக்கு அப்பால் உள்ளது என்பதைப் பார்க்கும் போது கம்பனுடைய கவிகளின் கட்டுக்கோப்பையும் ஞாபக சக்தியையும் கண்டு வியப்படையாமல் இருக்க முடியாது.

'தசரதனுடைய உயிர் இராமன்' என்பதைத் தொடர்வோம்:

பரதன் நாடாள வேண்டுமென்றும் இராமன் பதிநான்கு ஆண்டுகள் வனத்துக்குப் போகவேண்டு மென்றும் கைகேசி சொன்னவுடன் மயங்கி விழுந்து விட்ட மன்னன், நெடுநேரம் பற்பல சூளுரைகள் சொல்லிப் புலம்புகிறான். கைகேசியை ஏசுகின்றான்; தருமத்தை நிந்திக்கின்றான். பெண் வருக்கத்தையே அழித்துவிடவேண்டும் என்கிறான். கொடுத்த வரத்தை மறுத்துவிடலாமா என்று எண்ணுகிறான். உடனே கொடுத்த வரத்தை மறுத்துப் பொய்யனுவது பெருங் குற்றம் என்று எண்ணுகிறான். 'அவள் கேட்ட வரங்களை ஒத்துக்கொண்டாலும் எனக்கு அழிவு நிச்சயம். அதனால் ஒத்துக்கொள்ளவும் வேண்டாம், மறுக்கவும் வேண்டாம் இவளை வாளால் வெட்டிக் கொன்றுவிடலாமா என்றாலும் அதுவும் எனக்கு அழிவுண்டாக்கும்' என்று குழம்புகிறான்.

கடைசியாகக் குற்றமான காரியம் எதையும் செய்து விடாமல் கைகேயியிடமே கேட்டுக்கொள்ளலாம் என்று தீர்மானித்து அவளுடைய காலில் விழுந்து கெஞ்சு கிறான்:



'கைகேசி! உன் மகன் பரதன் உத்தமன், இராமனைக் காட்டுக்கு ஓட்டிவிட்டு அவனுக்கு முடிசூட்டுகிறோம் என்றால், அவன் அதை ஒத்துக் கொள்ளவே மாட்டான். ஒருக்கால் அவன் ஒத்துக்கொண்டாலும் இந்த நாட்டி லுள்ள குடிமக்கள் சம்மதிக்க மாட்டார்கள். உலகத்தி லுள்ள மற்ற நாட்டவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார் கள். அவர்களெல்லாம் என்றென்றும் உன்னை இகழ்ந்து பேசும்படியான பழியைத் தேடிக்கொள்வதில் பயனென்ன? மனித சம்மதமும் தெய்வ சம்மதமும் இல்லாமல் யாருடைய உதவிகொண்டு நீயும், பரதனும் அரசாள்வீர்கள்? இராமன் என்னுடைய கட்டாய வேண்டுகோளினால்தான் முடிசூடச் சம்மதித்தான். அவனேகூட அரசுரிமையைப் பரதனுக்கு மகிழ்ச்சியுடன் தந்திடுவான். பரதனுக்கே முடி சூட்டிவிடுவோம். ஆனால், இன்னொரு வரம் நீ கேட்டாயே, அதை மறந்துவிடு. நான் முன்னே வாக்களித்த வரங்களை இல்லையென்று மறுக்கமாட்டேன். ஆனால், நீ கேட்ட இரண்டாவது வரம் எனக்கு அழிவுண்டாக்குமானதால் உன்னை என் தாய்போல் எண்ணிக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்! என்று மேலும்:

நின்மகன் ஆள்வான் நீ இனிது ஆள்வாய் நில
மெல்லாம்

உன்மயமாயே ஆளுதி தந்தேன் உரை குன்றேன்
என் மகன், என் கண், என் உயிர், எல்லா
உயிர்கட்கும்

நன்மகன் இந்த நாடு இறவாமை நய என்றான்.

உன்மகன் அரசாள்வான். நீயும் இன்பமுற்று அரசாள்வாய். நாடு முழுதும் உன் மயமாகவே ஆட்சி நடக்கட்டும்; பரதனுக்கே முடி சூட்டிவிடுகிறேன். சொன்ன சொல் தவறமாட்டேன். என்மகன், என்

கண், என் உயிர், எல்லா உயிர்களுக்கும் நன்மையே செய்பவனுகிய இராமன் இந்த நாட்டை விட்டுப் போகாமலிருக்கத் தயவு செய் என்ருன்.

மேலும்,

மெய்யே என்றன் வேரற நூறும் வினை நோக்கி
நையா நின்றேன். நாவும் உலர்ந்தேன்: நளினம்
போல்
கையான் இன்று என் கண்ணெதிர் நின்றும்
கழிவானேல்
உய்யேன் நங்காய் உன் அபயம் என் உயிர் என்ருன்.

சத்தியத்தைக் காக்கும் என் ஒழுக்கமே என்னை வேரோடு அழிக்கவும் எமனுக நேர்ந்து விட்டதைக் கண்டு நைந்து போகிறேன். உன்னைக் கெஞ்சிக் கெஞ்சி என் நாவும் வறண்டுவிட்டது. பெண்ணே! தாமரை போன்ற கைகளையுடைய இராமன் என் கண்ணிலிருந்து மறைவானுனல் நான் பிழைத்திருக்கமாட்டேன்; அதனுல் என் உயிர் உனக்கு அடைக்கலம் என்ருன். பின்னும்:

ஒன்ரு நின்ற ஆருயிரோடும் உயிர் கேள்வர்
பொன்ரு முன்னம் பொன்றினர் என்னும் புகழ்
அல்லால்
இன்று ஓர் காறும் மெல்வளையார் தம் இறை
யோரைக்
கொன்ருர் இல்லை கொல்லுதியோ நீ கொடியாளே.

கணவனுடைய உயிரே தம்முயிர் என்று ஒன்றுபட்டு கணவனுக்கு அபாயம் நேர்ந்தால் அவன் உயிர் போவதற்கு முன் தம்முயிரை விட்டுவிட்டார்கள் என்ற



புகழுடைய பெண்களைத்தான் அறிந்திருக்கிருேம், இது வரையிலும் கணவனைக் கொன்ற பெண்ணைக் கண்டதில்லை. கொடியவளே! நீ (என் உயிராகிய இராமனை என்னை விட்டுப் போகச் செய்து) என்னைக் கொல்ல விரும்புகிருயே—என்ருன், பின்னும்;

ஏவம் பாராய் இனமுறை நோக்கய் அறம் எண்ணுய்
ஆவென்பாயோ அல்லை மனத்தால் அருள்
கொன்ருய்
நா அம்பால் என் ஆருயிர் உண்டாய் இனி ஞாலம்
பாவம் பாராது இன்னுயிர் கொள்ளப் படுகின்ருய்

நீ சொன்னது மாபெரும் குற்றம் என்பதை நீ எண்ணிப் பார்க்கவில்லை; நம் குலத்தின் ஒழுக்க வழக்க முறையையும் கருதவில்லை; அச்சமோ கூச்சமோ இல்லாமல் வாய்ச் சொல்லாகிய அம்பைப் பாய்ச்சி என் அருமையான உயிரைக் குடித்துவிட்டாய். பாவம் என்பதையும் பாராமல் இனிய உயிரைப் பறிக்கத் துடிக்கிருய்—என்ருன்.

இப்படியெல்லாம் தசரதன் கெஞ்சிக் கேட்டுக் கொண்டும் கைகேசியின் மனம் மாறவில்லை. "நீங்கள் கொடுத்த வரங்களை மறுத்துப் பொய்யராகிவிட்டால் நான் உயிர் வாழமாட்டேன்" என்று கண்டிப்பாகச் சொல்லி விடுகிருள். இனிமேலும் அவளைக் கெஞ்சுவதில் பயனில்லை யென்று கண்டுவிட்ட மன்னன்,

வீய்ந்தாளே இவ்வெய்யவள் என்னு மிடல் வேந்தன்
ஈய்ந்தேன் ஈய்ந்தேன் இவ்வரம் என்சேய் வளமான
மாய்ந்தேன் நான்போய் வானுலகாள்வேன் வசை
வெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மகனேடும் நெடிது என்ருன்,

கெட்டாள் இந்தக் கொடியவள்! இவளை ஏன் கெஞ்சிக் கொண்டிருக்கவேண்டும் என்று தீர்மானித்துவிட்ட மன்னன் "கொடுத்தேன், கொடுத்தேன். என் மகன் காட்டுக்குப் போகவேண்டும் என்ற வரத்தை, நான் இறந்து வானுலகத்துக்குப் போகிறேன். ஆனால் அடி பழிகாரி! நீயும் உன் மகனும் இந்தப் பழியாகியக் கடலில் விழுந்து கரையேற மாட்டாமல் நெடுங்காலம் தவிப்பீர்கள்—என்றான்.

இதைச் சொல்லிவிட்டு மன்னன் மூர்ச்சையடைந்து விட்டான். தன் காரியம் வெற்றியடைந்து விட்ட மகிழ்ச்சியுடன் கைகேசி தூங்கிவிட்டாள்.

பொழுது விடிவதற்கு முன்னாலேயே அயோத்திமா நகரத்து மக்கள் இராமனுக்கு முடிசூட்டு விழாவின் வைபவங்களைக் கண்டு களிக்கத் தங்களை அலங்கரித்துக் கொள்ளுகிறார்கள். விழாவைக் காணப் பல நாட்டு மன்னர்களும் வந்து விட்டார்கள். அரசர் கூட்டமும் அந்தணர் கூட்டமும் தெருக்களை அடைத்துக்கொண்டு முடிசூட்டும் மண்டபத்தை நெருங்கிவிட்டார்கள். நகரம் முழுதும் விழாக் கோலமாக, ஆண்களும் பெண்களும் கூட்டங் கூட்டமாக இராமனுடைய பெருமையையும், அவன் அரசனாவதனால் மக்களுக்குக் கிடைத்த பாக்கியத்தைப் பற்றியும், பேசி மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அப்படியிருக்க, வேதியர்கள், முடிசூட்டுதற்கு வேண்டிய எல்லா மங்கலப் பொருள்களையும் கங்கை, யமுனை முதலிய எல்லாத் தீர்த்தங்களையும் தயார் செய்துவிட்டு முடிசூட்டும் முகூர்த்த நேரம் நெருங்கியும் தசரச மன்னன் வரவில்லையே என்று ஏங்குகிறார்கள். அதையறிந்த முதன் மந்திரி சுமந்திரர் மன்னனை அழைத்து வர அரண்மனைக்குப் போனார். அங்கே மன்னனைக் காணாமல்



கைகேசியின் மாளிகைக்குப் போனார். அவரைக் கண்ட கைகேசி, வேறொன்றும் சொல்லாமல், "உடனே போய் இராமனை அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிடுகிறாள்.

முடிசூட்டும் காரியமாகத்தான் இராமனை அழைத்து வரச் சொல்லுகிறாளாக்கும் என்று விரைந்து சென்று இராமனைக், கண்டு "இராமா! அரசர்கள், முனிவர்கள், மற்றும் உலகிலுள்ள எல்லாரும் உனக்கு முடிசூட்டுவதில் உன்னைப் பெற்ற தாயாருக்கு எவ்வளவு மகிழ்ச்சியிருக்குமோ அவ்வளவு மகிழ்ச்சி யடைந்திருக்கிறார்கள். உன்னுடைய சிற்றன்னை கைகேசியும் அப்படியே மிக்க மகிழ்ச்சியுடன் உன்னை அழைத்துவரக் கட்டளையிட்டிருக்கிறார்கள். அழகிய மகுடம் சூட்டிக்கொள்ளப் புறப்படு சீக்கிரம்" என்றார், சுமந்திரர்.

உடனே இராமன் தேரேறி கைகேசியின் மாளிகைக்குப் போகிறான். இராமன் முடிசூட்டிக் கொள்ளத்தான் போகிறான் என்று மக்கள் மகிழ்ச்சியுடன் ஆரவாரிக்கிறார்கள்.

இராமன் வரவை எதிர்பார்த்துக் கைகேசி வாசற்புறத்திலேயே காத்துக் கொண்டிருக்கிறாள், தாயைக் கண்ட இராமன் வழக்கம்போல் அவளுடைய பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்து நிற்கிறான்.

"இராமா! மன்னன் உனக்கு ஒரு கட்டளையிட்டு அதை உன்னிடம் சொல்லச் சொன்னார்" என்றாள், கைகேசி.

"என் தந்தை சொன்ன ஏவலைத் தாங்கள் செல்ல இசைந்தது என் பாக்கியமே. எனக்குத் தந்தையும் நீங்கள்தான் தாயும் நீங்கள்தான். சொல்லுங்கள்"

''பரதனுக்கு முடிசூட்டி, அவன் நாட்டை ஆள வேண்டுமென்றும், நீ தவவேடம் பூண்டு காட்டில் தவம் செய்து புண்ணிய தீர்த்தங்களாடிப் பதினுன்கு வருடங்கள் வனவாசம் செய்துவிட்டு வரவேண்டும் என்றும் அரசன் பணித்திருக்கிறுர்'' என்றுள்.

''தாயே! அரசன் பணிக்காவிட்டாலும் தாங்கள் பணித்தால் நான் மறுப்பேனு? என் தம்பி அடையும் செல்வம் நான் அடைந்த செல்வமேயாகும். இதைவிட எனக்கு நன்மை பயக்கக்கூடிய பணி வேறில்லை. பணித்த படி தவவேடம் புனைந்து இன்றைக்கே காட்டுக்குப் போகிறேன்'' என்று விடைபெற்றுக் கொண்டான், இராமன்.

அங்கிருந்து தன்னைப் பெற்ற தாய் கோசலையிடம் போகிறுன். முடிசூட்டவேண்டிய முகூர்த்த நேரத்தில் தனியே வந்த மகனைப் பார்த்து, ''முடிசூட்டுவதற்கு ஏதேனும் இடையூறு நேர்ந்துவிட்டதா?'' என்று கேட்கிறுள்.

''குற்றமற்ற குணவானுகிய உங்கள் அன்புக்குரிய மகனை என் தம்பி பரதனுக்கே முடிசூட்டப் போகிறுர் கள்'' என்றுன்.

''மூத்தவன் இருக்க இளையவனுக்கு முடிசூட்டுவது முறையல்லவென்ருலும் பரதன் முக்காலும் நிறைந்த குணமுள்ளவன். உன்னைவிட நல்லவன், அவனுக்கு முடிசூட்டுவதில் குற்றமில்லை. வருத்தப்படாமல் நீயே அவனுக்கு உன் உரிமையை விட்டுக்கொடுத்து நீடூழி காலம் சுகமாக ஒற்றுமையாக வாழுங்கள்.'' என்றுள். நான்கு புதல்வர்களையும் சரிசமமாகப் பாவிக்கும் கோசலை.



அதன் பிறகு, தன்னைப் பதினுன்கு வருடங்கள் வனவாசம் செய்து, தவசிகளுடன் இருந்துவிட்டு வர வேண்டுமென்று அரசன் பணித்திருப்பதைச் சொன்னுன், இராமன்.

இதைக் கேட்டவுடனே கோசலை துடிதுடித்துப் போகிறுள். அரசன் செய்துவிட்ட இந்த மாபெரும் அநியாயத்தைப் பொறுக்கமாட்டாமல் பலவாறு பிரலா பிக்கிறுள். பிறகு தன்னையும் வனவாசத்துக்குக் கூட்டிக் கொண்டு போகும்படி இராமனை வேண்டுகிறுள். இராமன், தாய்க்குப் பலவிதமான சமாதானங்களைச் சொல்லிவிட்டு மற்ருெரு சிற்றன்னையான சுமித்திரை யிடம் சொல்லிக்கொண்டு வனத்துக்குப் புறப்படப் போய்விடுகிறுன்.

கோசலை, மனம் பொறுக்காமல், அரசனையே கண்டு இந்த அநியாயத்தை விலக்க வழி தேடலாம் என்ற ஆசையுடன் கைகேசியின் மாளிகைக்குப் போகிறுள்.

அங்கே மன்னன் தன்னினைவு இல்லாமல் இருப்பதைக் கண்டு புலம்புகிறுள்.

மன்னனுடைய நிலைமையைக் கேள்விப்பட்டுக் குல குருவாகிய வசிட்டர் கைகேசியின் மாளிகைக்கு வந்து மன்னன் நினைவிழந்து மரணத்தருவாயில் இருப்பதைக் கண்டு வருந்துகிறுர். மன்னன் அப்படிக் கிடப்பதற்குக் காரணம் என்னவென்று முனிவர், கைகேசியைக் கேட்கிறுர்.

அவளும் கூசாமல் தான் வரம் கேட்டதையும் மற்றும் நடந்ததையெல்லாம் சொல்லுகிறுள். முனிவர், மன்னவன் முகத்தில் குளிர்ந்தநீரைத்தெளித்துக் குளிர்ந்த காற்றை வீசச் செய்து இராமன் காட்டுக்குப் போகா திருக்க ஆவன செய்வதாக இதமான வார்த்தைகள்

சொல்லி மன்னனுக்குத் தன்னினைவு வரச் செய்தார். மன்னவனும் இராமனுடைய பெயரை முனகிக் கொண்டே கண்ணைத் திறந்து முனிவரைப் பார்த்தான்.

அதைக் கண்ட முனிவர், "அரசே கவலைப்பட வேண்டாம். இராமனே முடிசூட்டிக்கொண்டு அரசாளும் படி கைகேசியே மனமிரங்குவாள்." என்றார்.

"நானும் பொய்யனாகாமல் இராமனும் வனத்துக்குப் போகாதபடிக்கான முயற்சிகளைச் செய்யுங்கள்" என்று மன்னன் முனிவரை வேண்டிக்கொண்டான்.

முனிவரும் கைகேசியை நோக்கி, "உன் மகனுக்கே முடிசூட்டச் செய்து எல்லாருடைய கவலையையும் போக்கி, உன் கணவரின் உயிரையும் காப்பாற்றி, நீ புனிதமாகிய புகழை அடைய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன் அம்மா!" என்றார்.

கைகேசி அசையவில்லை. "மன்னவர் கொடுத்த வரத்தை மறுத்துச் சத்தியத்தினின்றும் பிறழ்வாரானல் நான் உயிரோடிருக்கமாட்டேன். இப்போதே இறந்து போவேன்" என்று விம்மி அழத் தொடங்கிவிட்டாள்.

முனிவருக்குக் கோபம் வந்துவிட்டது "கொஞ்சங்கூட தாட்சண்ணியம் இல்லாமல், உன்னுடைய கணவன் உயிருக்கு வந்துள்ள அபாயத்தையும் கருதாமல் புண்ணுக்குள் நெருப்பையும், விஷயத்தையும் பாய்ச்சுவது போல் பேசுகின்ற கொடியவளே! நீ பெண்ணா; நெருப்பா, பேயா? அரசன் தன்னுடைய வாயால் இராமனைக் காட்டுக்குப் போகச் சொல்லவில்லை. நீயே அவனைக் கூப்பிட்டு காட்டுக்குப் போகச் சொல்லிவிட்டாயே! இராமனும் போகாமலிருக்க மாட்டான். உன்னைப் போன்ற உயிருண்ணும் தீயவர்களைக் கண்டதில்லை" என்றார்.



'அரசன் சொல்லாமல் நீயே இராமனைக் காட்டுக்குப் போகச் சொல்லிவிட்டாயே!' என்று முனிவர் சொன்னது காதில் விழுந்ததும், மன்னவன்—

**தரவில் முனிவன் புகலத் தளராநின்ற மன்னன்**
**நாவில் நஞ்சம்உடைய நங்கை தன்னை நோக்கி**
**பாவி! நீயே வெங்கான் படர்வாய் என்று என்உயிரை**
**ஏவினையோ! அவனும் ஏகினனே என்றான்.**

மாசற்ற வசிட்ட முனிவர் சொன்னதைக் கேட்டு வருத்தம் மிகுந்த மன்னன், நாவில் விஷமுள்ளவளாகிய கைகேசியைப் பார்த்து, "அடி பாவி! நீயே என் உயிரைக் கொடிய கானகத்துக்குப் போகச் சொல்லிக் கட்டளை யிட்டுவிட்டாயா! அவனும் போய்விட்டானா!" என்றான்.

இதில், தசரதன் 'இராமனை காட்டுக்குப் போகச் சொல்லிவிட்டாயா' என்று சொல்லாமல் 'என் உயிரைக் காட்டுக்குப் போகச் சொல்லிவிட்டாயா?' என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

கைகேசியே இராமனைக் காட்டுக்குப் போகச் சொல்லிக் கட்டளையிட்டு விட்டதாகத் தெரிவதால் இராமன் இந்நேரம் காட்டுக்குப் போய்விட்டிருப்பானே என்ற ஏக்கத்தால், மன்னன் மீண்டும் பலவாறு புலம்பிக் கைகேசியிடம் கெஞ்சுகிறான். கைகேசியின் மனம் இரங்கவில்லை. அதனல்,

**இன்னே பலவும் பகர்வான் இரங்காதாளை நோக்கிச்**
**சொன்னேன் இவள் என்தாரம் அல்லள் துறந்தேன்**
**மன்னே யாவான் வரும் அப் பரதன்தனையும் மகன்**
**என்று.**
**உன்னேன் முனிவா அவனும் ஆகான் என்உரிமைக்கு**
**என்றான்.**

இப்படிப் பலவாறு கெஞ்சியும் மனம் இரங்காத கைகேசியைப் பார்த்து, "இவள் என் மனைவி அல்லள்; விலக்கிவிட்டேன். மன்னனாக வரப்போகிற இவளுடைய மகன் பரதனையும் என் மகனாகக் கருதமாட்டேன். முனிவரே! (நான் இறந்துபோனால்) பரதன் எனக்கு ஈமச் சடங்குகள் செய்ய உரிமையுள்ளவன் அல்லன்," என்றான், தசரதன்.

அதன்பிறகு, மன்னன் கைகேசியைக் கெஞ்சுவதை விட்டுவிட்டு இராமனையே எண்ணியெண்ணிப் புலம்புகிறான். மன்னன் இறந்துவிடுவானோ என்று அஞ்சிய வசிட்டர் ஆறுதல் சொல்லும் முறையில், "அரசே கவலைப்பட வேண்டாம். நான் போய் இராமன் காட்டுக்குப் போகாதபடித் தடுத்துவிடுகிறேன்" என்றார்.

அது முடியுமா என்ற சந்தேகம் உதித்தும், மிக்கப் புனிதனாகிய குலகுரு வசிட்டர் சொன்னால் இராமன் இணங்குவான் என்று எண்ணி மன்னன் அமைதியடைந்தான்.

வசிட்டர் இராமனைச் சந்திப்பதற்கு முன்னால் பல நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன:

பரதனுக்கு முடிசூட்டவும் இராமனைப் பதினான்கு ஆண்டுகள் காட்டுக்கு அனுப்பவும் கைகேசி தசரதனிடம் வரம் கேட்டுத் தசரதன் அந்த வரங்களைக் கொடுத்துவிட்டான் என்பதையும் கேள்விப்பட்ட இலக்குவன் யுகாந்த காலத்து நெருப்புப்போல் சீறி எழுந்தான். 'சிங்கக்குட்டிக்குத் தயார் செய்த ஊனுணவை நாய்க்குட்டிக்கு ஊட்ட நினைத்துவிட்டதுபோல், என் அண்ணனுக்குச் சூட்டவிருக்கும் முடியைப் பரதனுக்குச் சூட்ட விரும்புகிறாளோ கைகேசி' என்று யுத்த கோலம் பூண்டு



"யார் வந்து தடுத்தபோதிலும் சரி, அவர்களையெல்லாம் கொன்றுவிட்டு என் மன்னனான இராமனுக்கு நானே முடிசூட்டப் போகிறேன். தடுப்பவர்கள் தடுக்கட்டும்" என்று சூளுரைத்துத் தன்னுடைய வில்லில் நாணேற்றி அண்ட கோளங்களையும் எட்டும்படி இடிமுழக்கம் போன்ற நாணோசை எழுப்பினான்.

இந்த ஓசை, சிற்றன்னை சுமித்திரையிடம் விடை பெறப் போயிருந்த இராமனுடைய காதில் விழுந்து உடனே இராமன் இலக்குவனை நாடிவந்தான். வெகு நேரம் அவனுடன் வாதாடி இலக்குவனைச் சாந்தப்படுத்தினான். இருவரும் சுமித்திரையிடம் போகிறார்கள்.

அவர்கள் சுமித்திரையிடம் பேசிக்கொண்டிருக்கும் போது கைகேசியினுடைய பணிப் பெண்கள் வருகிறார்கள். கைகேசி இராமனிடம் கொடுக்கக் கட்டளையிட்டதாக மரஉரிகளை நீட்டுகின்றார்கள். அவற்றை இலக்குவன் தன் அன்னை சுமித்திரையிடம் காட்டுகிறான்.

அப்போதே சுமித்திரை தன் மகன் இலக்குவனைப் பார்த்து, "நீயும் இராமனுடன் வனத்துக்குப் போக வேண்டும். ஆனால் தம்பியென்ற முறையில் அல்ல. அடியானாக அவனுக்கு ஏவல் புரியவேண்டும். அவன் திரும்பி வந்தால் நீயும் வா. அவனுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் உன் உயிரைக் கொடுத்துக் காப்பாற்று." என்கிறாள்.

இருவரும் சுமித்திரையிடம் விடை பெற்றுக் கொள்ளுகின்றனர். இராமனுடன் இலக்குவனும் வனத்துக்குப் போவான் என்பதை அறிந்தே கைகேசி அவனுக்கும் சேர்த்தே மரவுரிகளை அனுப்பி யிருந்தாள். தன் தாய் பணிப்பதற்கு முன்னாலேயே அண்ணனுடன்

காட்டுக்குப் போகத் தீர்மானித்துவிட்ட இலக்குவன் தானும் மரவுரியை அணிந்துகொண்டான்.

சுமித்திரையிடம் விடை பெற்றுக்கொண்ட பின் இராமன், இலக்குவனைப் பார்த்து, "தம்பி! நான் காட்டுக்குப் போகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டதால் என்னைப் பிரிந்து நம் தந்தையும் தாய்மார் களும் மிகுந்த துயரத்தில் வருந்துவார்கள். அவர்களுக்கு ஆறுதலாக நீ இங்கேயே இருப்பது நல்லது" என்கிறான்.

அதைக்கேட்ட இலக்குவன் மிகவும் வருத்தமுற்று, "அண்ணா! தண்ணீரிலிருந்து பிரித்துவிட்டால் மீன் உயிரோடிருக்குமா?" என்று மேலும் வாதாடுகின்றான். இராமன் மறுக்க முடியாமல் ஒத்துக்கொள்கிறான்.

இருவரும் மரவுரியணிந்து போவதைக் கண்ட நகர மக்கள் பலவாறு புலம்பிக் கண்ணீர் வடிக்கிறார்கள். இராமனும் தம்பியும் சீதையின் இருப்பிடத்துக்கு நடக் கிறார்கள். வழியில், இராமனைக் காட்டுக்குப் போகாமல் தடுத்து விடுவதாகத் தசரதனிடம் சொல்லிவிட்டு வந்த வசிட்டர் இவர்களைச் சந்திக்கிறார். இராமனும் தம்பியும் அவரை வணங்குகிறார்கள். அவர்கள் இருவரும் மரவுரி அணிந்திருப்பதையும் அவர்கள் முகக்குறியையும் பார்த்த முனிவர் அவர்கள் வனத்துக்குப் போகப் புறப்பட்டு விட்டதால் தான் அரசனுக்குச் சொல்லி வந்த படி இராமனைத் தடுக்க முடியாது என உணர்ந்து கவலை யடைந்தார்.

இருப்பினும் முனிவர் இராமனை அணுகி, "இராமா! நீ காட்டுக்குப் போய்விட்டால் மன்னன், உயிர் வாழ மாட்டார்." என்றார்.



"மன்னவர் இட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டியது என் கடமை. அவர் துயரமடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது தங்களைச் சேர்ந்தது" என்றான்.

அதற்குமேல் முனிவர் ஒன்றும் சொல்ல முடியாமல் மன்னவனுடைய நிலைமையைக் கருதிக் கண்ணீர் சிந்தி விட்டார். இராமன் அவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு நடந்தான். முனிவரும் அவனைப் பின் தொடர்ந்தார்.

மரவுரி யணிந்து, மகிழ்ச்சி பொங்கும் மலர்ந்த முகத்துடன், கொண்ட கொள்கையைக் கடைப்பிடித்து நடக்கும் இராமனுடைய உறுதியைக் கண்ட நகர மக்களும் அந்தணர்களும் முடிசூட்டு விழாக் காணவந்த சிற்றரசர்களும் இராமனை வியந்தும், கைகேசியை நிந்தித்தும், தசரதனுடைய நிலைமைக்கு இரங்கியும், பலவாறு பேசிக்கொண்டு இராமனைப் பின்தொடர் கின்றனர்.

மரவுரி யணிந்து வந்த கணவனையும் கொழுநனையும் கண்ட சீதை, துணுக்குற்று அலமறுகின்றாள். இராமன் அவளுக்கு நடந்ததையெல்லாம் சொல்லி, "என் தந்தை, தாய் இருவரும் இட்ட கட்டளைப்படி பரதன் முடிசூட்டிக் கொள்வான். நான் வனத்துக்குப் போய்த் தவம் செய்துவிட்டு வந்துவிடுகிறேன். நீ வருத்தப்படாமல் இங்கேயே இருக்க வேண்டும்" என்றான்.

"உங்கள் தந்தையும் தாயும் பணித்தபடி நீங்கள் செய்ய வேண்டியது பரிசுத்தமான காரியம்தான். அதற் காக நான் ஏன் உங்களைப் பிரிந்து இங்கே இருக்க வேண்டும்?" என்றாள், சீதை.

''காட்டில் வெப்பம் அதிகம். உன்னால் தாங்க முடியாது. அன்றியும், உன்னுடைய செம்பஞ்சு போன்ற பாதங்கள் கல்லிலும் முள்ளிலும் நடக்கத்தக்கனவல்ல. நீ மிகுந்த துன்பமடைய நேரும்'' என்கிறான், இராமன்.

''பரிவும், பாசமும் இல்லாமல் என்னை விலக்கிவிட்டுப் போக நினைக்கிறீர்கள். சூரிய வெப்பமும் கல்லும் முள்ளும் உங்களைப் பிரிந்திருக்கும் துன்பத்தைப்போல் அவ்வளவு துன்பம் தரக்கூடியவை அன்று'' என்று சொன்னாள், சீதை.

இதைக்கேட்ட இராமன் இன்னது செய்வதெனத் தீர்மானிக்க முடியாமல் திகைத்தான்.

அதற்குள் சீதை வேகமாக வீட்டுக்குள் சென்று, ஒரு நொடிப்பொழுதில் தானும் மரவுரியணிந்துகொண்டு வந்து இராமனை நெருங்கி நின்றாள். அதைக் கண்டு அங்கிருந்த அனைவரும் 'சீதை காட்டுக்குப் போவதா?' என்று எல்லையற்ற வேதனையடைந்தார்கள்.

இராமன் சீதையைப் பார்த்து, ''இதனால் வரக்கூடிய விளைவுகளை எண்ணிப் பார்க்காமல் நீயும் எங்களுடன் வரத் துணிந்துவிட்டாய். நீ வருவதனால் எல்லையற்ற துன்பம் உண்டாகும்'' என்றான்.

''நான் உங்களுடன் வருவது ஒன்றுதான் உங்களுக்கு துன்பமாக்கும்? மற்றதெல்லாம் இன்பமாக்கும்?'' என்று சிணுங்கினாள்.

அதற்குமேல் இராமன் ஒன்றும் சொல்லவில்லை. மரவுரி தரித்த மூவரும், தெருவை அடைத்துக்கொண்டு, நகர மக்கள் நெருக்கிக்கொண்டிருந்த கூட்டங்களை விலக்கிக்கொண்டு அரண்மனைக்கு நடந்தார்கள். இராமனைக் காணத் தெருவுக்கு வந்து காத்துக்கொண்டிருந்த தாய்



மார்களை வணங்கி, அவர்களைக் கேட்டுக்கொண்டு பின் வசிட்டரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு காட்டுக்குப் புறப்பட்டான். நகரத்தையும் நாட்டையும் கடந்து காடாரம்பம் வரையில் தேரில் செல்ல ஏற்பாடு செய்து, முதன் மந்திரி சுமந்திரரே தேர்ப்பாகனாகக் கொண்டு வந்த இரதத்தில் இராமனும் சீதையும் இலக்குவனும் வனத்துக்குப் பயணமானார்கள்.

நகர மக்களிற் பெரும் பகுதியும் இரதத்தைப் பின் தொடர்ந்து, எப்படியாவது இராமனைத் திரும்பி வந்துவிடும்படி கேட்டுக்கொள்வது என்றும், இராமன் திரும்பி வர மறுத்தால் தாங்களும் அவனுடன் தங்கிக் காட்டையும் நாடாக மாற்றி விடுவது என்றும் உறுதி பூண்டனர். இரதத்துக்கு முன்னாலும் பின்னாலும் நகர மக்களின் மாபெருங் கூட்டம் சூழ்ந்துவர இரதம் ஓட்டப்பட்டது. காடாரம்ப எல்லைக்குப் போகுமுன் இருட்டிவிட்டது. அதனால் பயணத்தை நிறுத்தி அங்கேயே இரவைக்கழித்துவிட்டு விடிந்தபின் காட்டுக்குப் போவதென்று தீர்மானிக்கப்பட்டது. இராமனும் சீதையும் இலக்குவனும் சுமந்திரரும் இரதத்திலேயே இரவைக் கழிக்க, நகர மக்கள் தரையில் படுத்துக்கொண்டார்கள்.

நகர மக்கள் தன்னைவிட்டுப் போகமாட்டார்கள் என்பதைக் கண்ட இராமன், ஒரு யுக்தி கண்டுபிடித்துச் சுமந்திரரிடம், "பேரன்புடைய நகர மக்கள் என்னை விட்டுப் போகமாட்டார்கள். அதனால் அவர்கள் அயர்ந்து தூங்கும்போது நாங்கள் இறங்கிக் காட்டுக்கு நடந்து போய்விடுகிறோம். நீங்கள் இரதத்தைத் திருப்பி அயோத்திக்கு ஓட்டுங்கள். நான் காட்டுக்குப் போகாமல் திரும்பி விட்டதாக எண்ணி அவர்கள் இரதத்தைப் பின் தொடர்ந்து அயோத்தியை அடைந்து விடுவார்கள். தயவு செய்யுங்கள்'' என்றான்.

சுமந்திரனும் இராமனை அப்படி விட்டுப் பிரிய மனமில்லாமல் வருத்தத்தோடு சம்மதித்தான்.

அதன்படியே இரதம் திருப்பி ஓட்டப்பட்டது. நகர மக்களும் இராமன் இரதத்தில் இருப்பதாகவே எண்ணிக் கொண்டு இரதத்தைப் பின்தொடர்ந்தனர். இரதம் அயோத்தியை அடைந்தது.

இரதத்தோடு காட்டை நோக்கிச்சென்ற நகரமக்கள் இராமனை வற்புறுத்திக் கெஞ்சிக் காட்டுக்குப் போகாதபடி திரும்பிவிடச் செய்தாலும் செய்வார்கள் என்ற நப்பாசை வைத்திருந்த வசிட்ட முனிவரும் இரதம் திரும்பி வந்து விட்டதைக் கண்டு இராமனும் வந்துவிட்டதாக ஆவலோடு இரதத்தண்டை வந்தார். இரதத்திலிருந்து இறங்கிய சுமந்திரன், முனிவரை வணங்கி நடந்ததைச் சொல்லி இராமனும் சீதையும் இலக்குவனும் காட்டுக்குப் போய்விட்டதை அறிவித்தான். அதைக் கேட்ட முனிவர் 'ஐயோ! முடிந்தது மன்னன் வாழ்வு' என்று பெருமூச்சு விட்டார்.

முனிவரும் சுமந்திரனும் மன்னன் படுத்துக் கிடந்த இடத்துக்குப் போகிறார்கள்.

இராமன் காட்டுக்குப் போகத் தேரேறி பயணப் பட்டுவிட்டான்; அவனைக் காட்டுக்குப் போகாவண்ணம் தடுத்துக் கூட்டிக்கொண்டு வந்துவிடவே நகர மக்கள் இரதத்தைப் பின்தொடர்ந்து போயிருக்கிறார்கள் என்று தசரதனுக்கு அருகிருந்தவர்கள் சொல்லி யிருந்தார்கள். அதனால், மன்னன் இராமன் திரும்பி வந்துவிடுவான் என்ற ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.





முனிவரும் சுமந்திரரும் தசரதன் படுத்திருந்த இடத்துக்கு வருவதைக் கண்டவர்கள் இரதம் திரும்பி வந்துவிட்டது என்று மன்னனுக்குச் சொன்னார்கள்.

அதைக் கேட்ட மன்னன், அதுவரையிலும் மூடியிருந்த கண்களைத் திறந்து முனிவரைப் பார்த்து, "இராமன் வந்துவிட்டானா!" என்றான்.

இல்லையென்று சொல்ல மனம் வராமல் முனிவர் தயங்குவதைக் கண்டே இராமன் வரவில்லை என்பதை ஊகித்து மன்னன் ஏங்குவதைக் கண்ட முனிவர் அந்தத் துன்பத்தைக் காணச் சகிக்காமல் அப்புறம் ஒதுங்கினார். மன்னவன் முனிவரை விட்டுத் தேரோட்டிச் சென்ற சுமந்திரனைப் பார்த்து,

நாயகன் பின்னும் தன் தேர்ப்பாகனை நோக்கி நம்பி
சேயனோ அணியனோ என்றுரைத்தலும் அனையான் 'செய்ய
வேயுயர் கானம் தானும் தம்பியும் மிதிலைப் [பொன்னும்
போயினர்' என்றான்; என்ற போழ்தத்தே ஆவி போனான்.

மன்னன் மறுபடியும் தன் தேர்ப்பாகனைப் பார்த்து, "இராமன் வெகுதூரம் போய்விட்டானா, அருகாமையில் இருக்கிறானா?" அதற்குத் தேர்ப்பாகன், "இராமனும் இலக்குவனும் சீதையும் மூங்கிலும் மரங்களும் அடர்ந்த காட்டுக்குள் போய்விட்டார்கள்" என்றான். என்ற அக்கணமே மன்னனுடைய உயிரும் போய்விட்டது.

இதுவரையிலும் சொல்லப்பட்டதில் கம்பநாட்டாழ்வார் 'இராமன் தசரதனுடைய உயிர்' என்ற கருத்தை எவ்வளவு வியக்கத்தக்க ஞாபக சக்தியுடனும் நயமிக்கப் பொருத்தத்துடனும் தொடர்ந்திருக்கிறார் என்பதை வாசகர்கள் அனுபவித்து ரசித்திருப்பார்கள்.

பரதனுக்கு முடிசூட்டி இராமனைப் பதினான்கு ஆண்டுகள் காட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று கைகேசி வரம் கேட்டாள். பரதனுக்கு முடிசூட்டி விடுகிறேன்; ஆனால், இராமனைக் காட்டுக்குப் போகச் சொல்ல வேண்டாம் என்று மன்னன் வெகுநேரம் கெஞ்சினான். கைகேசி இரங்கவில்லை.

அதனால் சினம் மிகுந்த மன்னன், ''கைகேசி என் மனைவியும் அல்லள், அவள் வயிற்றிற் பிறந்த பரதனும் என் மகன் அல்லன். நான் இறந்தபின் எனக்கு ஈமச் சடங்குகள் செய்யப் பரதனுக்கு உரிமையில்லை'' என்று வசிட்டரிடத்தில் சொல்லிவிட்டான்.

இந்தச் சாபத்தால் கைகேசியும் பரதனும் இனி நடக்கக்கூடிய எல்லாக் காரியங்களிலும் விலக்கப்பட்டவர்களாகிவிட்டார்கள். அப்படியானால், இராமனுடைய அவதார நோக்கமாகிய இராவணாதி அசுரர்களைக் கொல்லும் காரியம் முடிந்து, இராமன் அயோத்திக்கு மன்னனாகப் பட்டாபிஷேகம் செய்து கொள்ளும் சமயத்திலும் கைகேசியும் பரதனும் விலக்கப்பட்டவர்களாகத் தானே இருக்க நேரிடும்?

கைகேசியாவது இராமனைக் காட்டுக்கு ஓட்டிய கொடுமைக்காரி. அவளை முற்றிலும் விலக்கிவிட்டாலும் தகுமெனக் கொள்ளலாம். ஆனால், முற்றிலும் நிரபராதியும் அழகிலும் குணத்திலும் ஒழுக்கத்திலும் இராமனை ஒத்தவன் என்று எல்லோராலும் மதிக்கப்பட்டவனும், இராமனைப் பெற்ற கோசலையின் வாக்கால் 'இராமனைக் காட்டிலும் நல்லவன்' என்றும் புகழப்பட்டவனுமான பரதன் விலக்கப்படுவது நியாயமாகுமா?



தசரதன் இட்ட இந்தச் சாபத்தைத் தசரதனே நீக்கும்படி நேரிட்ட நிகழ்ச்சியைக் கம்பன் சித்திரிக்கிற அழகையும் அதில் முன் சொன்ன ஒரு உவமையை மீண்டும் வெகு பொருத்தமாகத் தொடர்கின்ற ஞாபக சக்தியையும் பாருங்கள்! தசரதன் சாபமிட்ட செய்யுளுக்கும், அவன் சாபத்தை நீக்குகின்ற செய்யுளுக்கும் இடையில் சுமார் எண்ணாயிரம் செய்யுட்கள் உள்ளன என்பது கம்பனுடைய அதியற்புத ஞாபக சக்திக்குச் சான்றாகும்.

வனவாசத்தில் தண்டகாரண்யத்தில் இருக்கும் போது இராவணனுடைய தங்கை சூர்ப்பணகை அங்கே வந்து இராமனைக் கண்டு மோகித்துத் தன்னுடைய அரக்கி வடிவத்தை மறைத்துச் சுந்தர வடிவத்துடன் இராமனை அணுகி சாகசம் செய்கிறாள். இராமன் அவளை ஏளனம் செய்து அனுப்பிவிடுகிறான். மறுநாள் அவள் சீதையைத் தூக்கிக்கொண்டு போய்விட எண்ணிச் சீதையிடம் போகின்றாள். அதைக் கண்ட இலக்குவன் சூர்ப்பணகையைப் பிடித்து அவளுடைய மூக்கையும் காதுகளையும் அறுத்து மானபங்கம் செய்துவிடுகிறான். அவள் அழுதுகொண்டே போய் கரன் தூஷணன் என்ற அரக்கத் தலைவர்களிடம் முறையிடுகின்றாள். அவர்கள் இராம இலக்குவர் மீது போர் தொடுத்து மடிகின்றார்கள்.

சூர்பணகை அறுபட்ட அங்கங்களோடு இலங்கைக்கு ஓடி, இராவணன் காலில் விழுந்து ஓலமிடுகின்றாள். இராவணன் கடுங்கோபத்துடன் யார் இப்படி அங்கபங்கம் செய்தவர்களென்று சீறுகிறான்.

சூர்ப்பணகை, இராம இலக்குவர்களின் அபூர்வமான அழகை முதலில் சொல்லிவிட்டுத் தசரதனுடைய

புத்திரர்களாம்; அரக்கர்களை ஒழிக்க வந்தவர்களாம். என்று அவர்களுடைய வரலாற்றையும் சொல்லுகிறுள்.

"அவர்கள் இப்படி உன்னை பங்கப்படுத்த நீ என்ன செய்தாய்?'' என்கிறுன், இராவணன்.

சூர்ப்பணகை சீதையினுடைய அழகைப் பலபடியாக வருணித்துவிட்டு, ''ஈடு இணையில்லாத அந்த அழகியை உனக்குக் காதலியாகக் கொண்டுவர எண்ணி அவளைத் தூக்கப்போனேன். உடனே, இளையவனுகிய இலக்குவன் என்னைப் பிடித்து இப்படிப் பங்கப் படுத்திவிட்டான். நீ அந்தப் பேரழகியை அடைந்தால்தான் உனக்குள்ள பெருமைகளுக்கு அழகு'' என்றும், இன்னும் பற்பல விதமாகச் சொல்லி அவனுக்கு ஆசை மூட்டுகின்ருள்.

அதைக்கேட்ட இராவணன் மற்றெல்லாவற்றையும் மறந்துவிட்டுச் சீதையின்மேல் காமவெறி கொண்டு விட்டான். எப்படியாவது அந்தச் சீதையை அடைய வேண்டுமென்று, அதற்காகத் தன் மாமன் மாரீசனை மாய மானுகப் போய்ச் சீதைக்கு அந்த மானின்மேல் ஆசை யுண்டாகச் செய்து இராமனையும் இலக்குவனையும் சீதையை விட்டுப் பிரியச் செய்யும்படிக் கேட்டுக் கொண்டான். அதன்படியே மாயமானுக வந்து மாரீசன் இராமனையும் இலக்குவனையும் சீதையை விட்டுப் பிரியும் படிச் செய்து, இராவணன் துறவி வேடத்தில் வந்து சீதையைப் பன்னசாலையோடு தூக்கி ஆகாய விமானத் தில் வைத்துக்கொண்டு போய்விடுகிறுன். சீதையைத் தேடிக்கொண்டு சென்ற இராமனும் இலக்குவனும் இராவணனுல் வீழ்த்தப்பட்டுக் குற்றுயிராய்க் கிடந்த சடாயுவைப் பார்க்கிறுர்கள். சீதையை இராவணன் விமானத்தில் கொண்டுபோனதைப் பார்த்துத் தான்



தடுத்ததையும் இராவணன் தன் சிறகுகளை வெட்டி வீழ்த்திவிட்டதையும் சடாயு சொல்லுகிறுன்.

இராம இலக்குமணர்கள் தென் திசை நோக்கிச் செல்கிறுர்கள். அனுமான் இவர்களைச் சந்திக்கிறுன். இராமனுக்கும் சுக்ரீவனுக்கும் நட்பு உண்டாகிறது. இராமன் வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு முடிசூட்டுகிறுன்.

அனுமான் சீதையைக் கண்டு பிடிக்க இலங்கைக்குப் போய் அசோக வனத்திலுள்ள சீதையைக் கண்டு, தான் இராம தூதன் என்று இராமனுடைய கணையாழியை அடையாளம் காட்டிப் பேசிவிட்டுச் சீதையின் சூடா மணியை இராமனுக்குக் காட்ட வாங்கிக்கொண்டு, இராவணனைச் சந்திக்கும் நோக்கத்துடன் வனத்தை அழிக்கிறுன். போர் மூளுகின்றது. அனுமான் கிங்கரரைக் கொல்லுகிறுன். பின், பஞ்ச சேனுபதிகளையும் இராவண னுடைய மகன் அட்சய குமாரனையும், கொன்று விடு கிறுன். பின் இந்திரசித்தின் நாகாஸ்திரத்தால் கட்டுண்டு இராவணனுக்கு முன்னுல் நிறுத்தப்படுகிறுன். இராவணன் இந்தச் சிறு குரங்கா இவ்வளவு பராக்கிரமத்துடன் போர் புரிந்தது என்று வியப்படைந்து விசாரிக்கிறுன். அனுமான் தான் இராமனுடைய தூதனென்று இராமனுடைய பெருமைகளைச் சொல்லி, இராவணனை அலட்சியப் படுத்திப் பேசுகின்றுன். இராவணன் சினந்து குரங்கைக் கொன்றுவிடச் சொல்லுகிறுன். தூது வந்தவரைக் கொல்லக்கூடாதென்று விபீஷணன் சொல்ல, அனுமானின் வாலில் துணிகளைச் சுற்றி எண்ணை ஊற்றி நெருப்பு வைத்து ஓட்டிவிடச் செய்கிறுன். வாலில் தீ வைக்கப்பட்டது. அந்தத் தீயைக்கொண்டே அனுமான் இலங்கை முழுவதையும் எரித்துச் சாம்பலாக்கி விட்டு

இராமனிடம் வந்து சேருகிறன். சீதை கொடுத்தச் சூடா மணியைக் கண்ட இராமன் அனுமானை வாழ்த்துகிறன். சீதையைக் கண்டு பேசின விவரங்களைச் சொல்லிச் சீதை இன்னும் ஒரு மாதம்தான் உயிரோடிருப்பாளென்றும், அதற்குள் அவளை மீட்காவிட்டால் இறந்து போவாள் என்றும் சொன்னதைச் சொன்னுன்.

மிகப் பெரிய வானர சேனை திரட்டப்பட்டு இலங்கை மீது படையெடுத்தார்கள். சமுத்திரத்தைத் தூர்த்து இலங்கைக்குப் பாதை அமைத்து இலங்கையை அடைகிறது வானரசேனை. விபீஷணன் சீதையை விட்டுவிடும்படி இராவணனுக்குப் புத்தி சொன்னுன். அதைக் கேட்ட இராவணன் கொதிப்படைந்து விபீஷணனை நாட்டை விட்டுப் போகும்படி சொல்லுகிறன். விபீஷணன் இராமனைச் சரணடைகிறன்.

விபீஷணனுடைய உதவியால் உளவுகள் அறிந்துப் போர் நடத்தப்படுகின்றது.

கம்பனுடைய 'யுத்த காண்டம்' ஒரு அற்புதப் படைப்பு. அதன் அழகைப்பற்றி விவரிப்பது இங்கே நோக்கமல்ல. 'இராமன் தசரதனுடைய உயிர்' என்ற தலைப்பின்கீழ் ஆராயப்பட்ட இலக்கியச் சிறப்பின் தொடர்ச்சியாக, அங்கே காட்டப்பட்ட ஒரு உவமையைப் பல்லாயிரம் செய்யுட்களுக்குப் பின்னல் சொல்லப்பட்டிருப்பதையும், கைகேசியையும் பரதனையும் தசரதன் தன்னுடைய மனைவியும் மகனும் அல்லவென்று விலக்கி விட்ட சாபத்தை நீக்குகின்ற நிகழ்ச்சியையும் விளக்குவதே நோக்கம். அதற்காக யுத்தம் ஆரம்பமாகும் வரையிலுமுள்ள நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகச் சொல்லப் பட்டது.



இனி எடுத்துக்கொண்ட விஷயத்துக்குப் போவோம். இராம-இராவண யுத்தம் நடந்து, இராவணன் கொல்லப் படுகிறன்:

முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும்
முதல்வன் முன்னுள்
எக்கோடி யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த
வரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செறுக்கடந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர்குடித்துப் புறம்போயது இராகவன்
தன் புனிதவாளி.

இராவணன் சிவபிரானிடத்தில் வரம் பெற்றிருந்த மூன்று கோடி ஆண்டுகள் ஆயுளையும், அவன் செய்துள்ள மற்றப் பெருந்தவங்களையும் இராவணனை எங்கிருந்து யார் வந்தாலும் வெல்ல முடியாது என்று முன்னே பிரமன் கொடுத்திருந்த வரத்தையும் அட்ட திக்குகளிலும் போரிட்டு உலகம் முழுவதையும் வென்றப் புயவலிமையையும் அழித்துவிட்டு இராவணனுடைய மார்பிற் புகுந்து அவனுடைய உயிரைப் பறித்துக் கொண்டு ஓடிவிட்டது, இராமனுடைய பரிசுத்தமான பாணம்.

இராவணன் இறந்தபின் விபீஷணனுக்கு முடிசூட்டப்படுகிறது. அதன்பின் இராமன் அனுமானை அனுப்பி சீதையை அழைத்துவரச் செய்தான். சீதை வருகிறள்.

சீதையின் கற்பின் தூய்மையை உலகம் அறியச் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் இராமன் பொய்க் கோபம் காட்டிச் சீதையை ஒழுக்கம் கெட்டவ

ளென்றும், உயிரை விட்டுவிடாமல் இத்தனை காலம் அரக்கனுடைய நகரத்தில் அடங்கியிருந்தவள் என்றும் பலவாறு ஏசி, அவளை ஏற்றுக்கொள்ள மறுக்கிறான்.

சீதை பதில் சொல்லுகிறாள்: "நான் இறந்துபோகத் தான் விரும்பினேன். ஆனால், உங்கள் பெருமைக்கு மாசுண்டாகுமென்றே உயிர்விடவில்லை. நீங்கள் என்னைத் தேட அனுமானைத் தூது அனுப்பவில்லையா? அனுமான் என்னைப் பார்த்தபோது, நான் உயிரையே விட்டு விடத் தூக்குப் போட்டுக்கொள்ளப் போகும் தருணத்தில் அவன் உங்கள் பெயரைச் சொல்லி என்னைத் தடுத்து உங்கள் கணையாழியைக் காட்டி என்னைச் சமாதானப் படுத்தவில்லையா? ஒரு மாதத்துக்குள் நீங்கள் வந்து என்னை மீட்காவிட்டால் நான் இறந்துபோவேன் என்று அனுமானிடம் நான் சொல்லியனுப்பினதை அவன் உங்களிடம் சொல்லவில்லையா?" என்றெல்லாம் கேட்கிறாள்.

இராமன் அதற்குப் பதில் சொல்லவில்லை.

"நீங்கள் என்னை வெறுத்தபின் நான் யாருக்காக உயிர் வாழவேண்டும். உங்கள் விருப்பப்படியே நான் இறந்து போகிறேன்" என்று சொல்லிவிட்டு, இலக்குவனைப் பார்த்து "தீக்குளிப்பதற்குத் தீ மூட்டுங்கள்" என்கிறாள்.

இலக்குவன், இராமனைப் பார்க்கிறான். இராமன் இலக்குவனுக்குக் கண்சாடை காட்டித் தீ மூட்டச் சொல்லுகிறான். இலக்குவன், தீ மூட்டுகிறான்.

ஆகாயத்தில் கூடியிருந்த தேவர்களும் இதைக் கண்டு நடுங்கிவிட்டார்கள்.



சீதை, இராமனை வணங்கிவிட்டு, "தீக் கடவுளே! நான் மனோவாக்குக் காயத்தால் மாசடைந்திருந்தால் நீ என்னை எரித்து அழித்துவிடுக!" என்று சொல்லிவிட்டுத் தீக்குள் பாய்ந்தாள்.

அவளுடைய கற்புக் கனலைத் தாங்கமுடியாமல் தீ ஒடுங்கிவிட்டது. உடனே அக்கினி தேவன் இராமன் முன் தோன்றி, "இராமா! இந்த உத்தமியின் கற்புக் கனல் என்னைச் சுட்டுவிட்டது. இவள் பெய்யென்றால் மழை பெய்யுமே! இவள் சினந்தால் பூமியும் பிளந்து போகுமே! இவள் சபித்தால் பிரமதேவனும் மாண்டு போவானே! அப்படிப்பட்ட உத்தமியை நீ அவமதிக்கிறாயே!" என்றான்.

அதைக்கேட்ட இராமன் அக்கினி தேவனைப் பார்த்து, "இவள் மாசற்றவள் என்பதை நீ நிரூபித்து விட்டதால் நான் அவளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன்" என்றான்.

இந்தச் சமயத்தில் சிவபிரான் சுவர்க்கத்தில் இருந்த தசரதனை அணுகி, "உன்னைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டுக் காட்டுக்குப் போய்விட்ட உன்மகன் இராமன் அதோ இருக்கிறான். நீ பூலோகத்துக்குப் போய் அவனைக் கண்டு மகிழ்ந்து உன் துயரத்தை ஆற்றிக் கொள்க" என்று சொல்லித் தசரதனைப் புட்பக விமானத்தில் பூலோகத்துக்கு அனுப்புகிறான். தசரதன் சிவபெருமான் அருளால் சொர்க்கத்திலிருந்த தேவ உடலைவிட்டு முன் மகனைப் பிரிந்தபோதிலிருந்த மானிட வடிவோடு இராமனும் சீதையும் இலக்குவனும் அனுமானும் மற்றும் விபீஷணாதியரும் இருந்த இடத்துக்கு வருகிறான்.

**ஆதியான் பணி அருள் பெற்ற அரசருக் கரசன்**
**காதல் மைந்தனைக் காணிய உவந்ததோர் கருத்தால்**
**பூதலத்திடைப் புகுந்தனன் புகுதலும் பொருவில்**
**வேத வேத்தனும் அவன் மலர்த்தாள் மிசை**
**வீழ்ந்தான்.**

பரமசிவனுடைய அருள்பெற்ற அரசர்க் கரசனை தசரதன், பரமசிவன் பணித்தபடித் தன் காதல் மகனாகிய இராமனைக் கண்டு மகிழும் ஆசையால் பூதலத்திற்கு வந்தான். வந்தவுடன் வேதத் தலைவனான இராமன் தசரதனுடைய பாத மலர்களில் விழுந்து வணங்கினான்.

**வீழ்ந்த மைந்தனை எடுத்துத் தன் விலங்கல்**
**ஆகத்தின்**
**சூழ்ந்து அழுத்திடத் தழுவித் தன் கண்ணின்**
**நீராட்டி**
**வாழ்ந்த சிந்தையில் மனம் மிகக் களிப்புற மன்னன்**
**போழ்ந்த துன்பங்கள் புறப்படநின்று இவை**
**புகன்றான்.**

காலில் விழுந்த மகனைத் தன் வலிமைமிகுந்த மார்பில் ஆழ்ந்து அழுத்தும்படி இறுகத் தழுவி, முன் அயோத்தியில் வாழ்ந்த இன்ப நாட்களை நினைத்துக் களிப்படைந்து, (கைகேசி கேட்ட வரங்களால்) மனதைப் பிளந்துவிட்டத் துன்பங்களின் நினைவு வந்து பின்வருமாறு சொன்னான்.

**அன்று கேகயன் மகள் கொள் வரமென்னும் அயில்**
**வேல்**
**இன்று காறும் என் இதயத்தின் இடைநின்றது**
**என்னைக்**



**கொன்றும் நீங்கலது இப்பொழுது அகன்றது உன்**
**குலப்பூண்**
**மன்றல் ஆகமாம் கந்த மாமணி இன்று வாங்க.**

அன்றைக்குக் கைகேசி வாங்கிக்கொண்ட வரம் என்ற இரும்புவேல் இன்றளவும் என் நெஞ்சில் இருந்து துன்புறுத்திக்கொண்டே யிருந்தது; என்னைக் கொன்ற பின்னும் அது என் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை. இன்றைக்குக் காந்தமலை போன்ற உன் அழகான மார்பைத் தழுவியவுடனே (அந்த இரும்பு வேலினை உன் காந்தசக்தி இழுத்தெறிந்து விட்டதால்) இன்றுதான் நீங்கிற்று—என்றான்.

ரசிக்கவேண்டிய கம்பசித்திரம் இந்தச் செய்யுளில் தான் அமைந்திருக்கிறது. அதைப்பாருங்கள். இதில் கைகேசி பெற்றுக்கொண்ட வரம் என்ற இரும்பு வேல் சொல்லப்படுகிறது. அந்த வேல் எது? எப்போது தசரதன் நெஞ்சிற் பாய்ச்சப்பட்டது?

முதன் முதல் இராமனைப் பிரியவேண்டிய சந்தர்ப்பமாக விசுவாமித்திரர், யாகத்தைக் காக்க இராமனைக் கேட்டபோது தசரதன் அடைந்த துயரத்தை,

**எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பிய சொல்**
**மருமத்தில் எறிவேல் பாய்ந்த**
**புண்ணிலாம் பெரும் புழையுள் கனல் நுழைந்தால்**
**எனச்செவியில் புகுதலோடும்.**

விசுவாமித்திரர் இராமனை அனுப்பும்படிக் கேட்டது சதரதனுடைய மார்பில் வேல் பாய்ச்சப்பட்டு முன்பே

அங்கிருந்த புண்ணின் பெரிய துவாரத்தில் கொள்ளியைச் செருகியதுபோல் துன்புறுத்தியது—என்று சொல்லப்பட்டது.

அதன்பின், கைகேசி இராமனைப் பதினான்கு ஆண்டுகள் காட்டுக்கு அனுப்பவேண்டும் என்று இரண்டாவது வரம் கேட்டாள்.

**இந்த நெடுஞ்சொல் அவ்வேலை கூறுமுன்னே**
**வெந்த கொடும் புணில் வேல் நுழைந்தது ஒப்ப**
**சிந்தை திரிந்து திகைத்து அயர்ந்து வீழ்ந்தான்**
**மைந்தன் அலாது உயிர் வேறிலாத மன்னன்.**

இந்தப் பெரிய வார்த்தையைக் கைகேசி சொல்லி முடிக்கு முன்னால், ஏற்கெனவே நெருப்பைச் செருகி வெந்து போயிருந்த கொடிய புண்ணில் வேலைக் குத்தியது போன்ற துன்ப மடைந்து மனம் பேதளித்துத் திகைத்து மயங்கி விழுந்துவிட்டான். மகன் இராமனைத் தவிர வேறு உயிர் இல்லாத மன்னன்.

'வெந்த கொடும் புணில் வேல் நுழைந்த' என்னும் அந்த வேல்தான், 'அன்று கேகயன் மகள் கொள்வர மெனும் அயில் வேல் இன்று இது காறும் என் இதயத்தின் இடை நின்றது'. பல்லாயிரம் செய்யுட்களுக்குப்பின் இந்த உவமையைத் தொடர்ந்திருப்பது வியக்கத்தக்கதல்லவா?

இனி, தசரதன் கைகேசியையும் பரதனையும் விலக்கிய சாபத்தை நீக்குகின்ற நிகழ்ச்சியைப் பார்ப்போம்:

தசரதன் இராமனைப் புகழ்ந்து மீண்டும் மீண்டும் அவனைத் தழுவி மகிழ்ந்துவிட்டுச் சீதையை அணுகு



கின்றான். சீதை விழுந்து வணங்குகிறாள். அவளை நோக்கி, ''ஒப்பரிய உன் கற்பின் சிறப்பை உலகத்தாருக்கு மெய்ப்பிக்கவே இராமன் உன்னைத் தீக்குளிக்கச் செய்தான், அதை மனதிற்கொண்டு வருந்தாதே'' என்று கூறிப் புகழ்ந்தான்.

அதன்பின் இலக்குவனை வாரியணைத்து, ''நீ இராமனை விடாது உடனிருந்து அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்ட உதவியிருப்பதை வானுலகத்துள்ள தேவர்கள் புகழ்ந்து பாராட்டுகிறார்கள்'' என்று சொல்லி வாழ்த்துகிறான்.

கடைசியாக இராமனைப் பார்த்து, ''மகனே! உன்னைக் கண்டதில் என் மனதிலிருந்த துயரமெல்லாம் நீங்கிப் பெருமகிழ்ச்சியடைந்தேன். உனக்கு விருப்பமான வரத்தைக்கேள், தருகிறேன்'' என்றான்.

''தந்தையே! அயோத்தியில் தங்களைக் கண்டு விடை பெற்றுக்கொள்ளாமலேயே நான் காட்டுக்குப் போக நேர்ந்துவிட்டது. மறுபடியும் தங்களை வானுலகத்துக்கு வந்துதான் கண்டுகளிக்க முடியும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இப்போது தாங்களே வந்து தரிசனம் தந்ததில் என் மனக்குறை நீங்கிவிட்டது, அதுவே போதும்'' என்றான்.

**ஆயினும் உனக்கு அமைந்தது ஒன்று உரை என,**
**அழகன்**
**தீயள் என்று நீதுறந்த என் தெய்வமும் மகனும்**
**தாயும் தம்பியும் ஆம்வரம் தருக எனத்தாழ்ந்தான்**
**வாய் திறந்து எழுந்து ஆர்த்தன உயிரெலாம்**
**வழுத்தி,**

"இருந்தாலும் உனக்கு விருப்பமான எதாவது ஒரு வரம் கேள்" என்று தசரதன் சொல்ல, இராமன் "தீயவள் என்று நீ வெறுத்து விலக்கிவிட்ட என் தெய்வமாகிய கைகேசி, என் தாயாகவும் அவள் மகன் பரதன் என் தம்பியாகவும் இருக்க வரந்தரவேண்டும்" என்று வணங்கினான். அதைக் கேட்டு உலகிலுள்ள எல்லா சீவராசிகளும் வாயார இராமனை வாழ்த்தி எழுந்து ஆனந்தக் கூத்தாடினார்கள்.

ஆனால் தசரதன்:

**வரதகேள் என தயரதன் உரை செய்வான்; மறுவில்**
**பரதன் அன்னது பெறுக, தான் முடியினைப் பறித்து**
**இவ்**
**விரத வேடம் மற்று உதவிய பாவிமேல் விளிவு**
**சரதம் நீங்கலதாம் என்றான் தழீஇய கைதளர.**

'இராமா! நான் சொல்லுவதைக் கேள்' என்று தசரதன் சொன்னான்: "குற்றமற்ற பரதன் அப்படியே உன் தம்பியாகட்டும். ஆனால் உன் மகுடத்தைப் பறித்து இந்தத் தவ வேடத்தை உனக்குத் தந்த பாவி கைகேசியின்மேல் உள்ள சாபத்தை நிச்சயமாக நீக்கமாட்டேன்" என்றான், மகனைத் தழுவியிருந்த தன் கைகளைத் தளர விட்டு.

அதற்கு இராமன், "தந்தையே! இராவணாதி அரக்கர்கள் தேவர்களுக்கு இழைத்து வந்த கொடுமைகளை நீக்கவேண்டிய கடமையை மறந்து முடிசூட்டிக்கொள்ள இசைந்தது என்னுடைய குற்றமேயல்லாமல் என்னைப் பெற்ற எம்பிராட்டி (கைகேசி) புரிந்த குற்றம் ஒன்று மில்லையே" என்றான். உடனே, தசரதனுடைய கோபம் நீங்கிவிட்டது.



**வரம் இரண்டு அளித்து அழகனை இளவலை**
**மலர்மேல்**
**விரவு பொன்னினை மண்ணிடை நிறுத்தி**
**விண்ணிடையே**
**உரவு மானமீது ஏகினன் உம்பரும் உலகும்**
**பரவும் மெய்யினுக்கு உயிர்அளித்து உறுபுகழ்**
**படைத்தோன்.**

சத்தியத்துக்காக உயிரைக்கொடுத்து விண்ணவரும் மண்ணவரும் வணங்கத்தக்க புகழ் பெற்றவனாகிய தசரதன் (இராமன் கேட்ட) இரண்டு வரங்களையும் கொடுத்துவிட்டு, அழகனாகிய இராமனையும் இலக்குவனையும் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளாகிய சீதையையும் பூலோகத்தில் நிறுத்திவிட்டு விமானத்தின் மீது ஏறி வானுலகம் சென்றுவிட்டான்.

கம்பனுடைய காவியத்தை ஆராயுந்தோறும் புதுப் புது இலக்கிய இன்பத்தை நுகரலாம்.

கம்பன் சூரிய அஸ்தமனத்தையும் உதயத்தையும் அந்தந்த சமயத்துக்கேற்றபடி கற்பனை கூட்டிச் சொல்லுவதில் ஒரு அழகு இருக்கும். இரண்டொரு உதாரணங்களைக் காண்போம்:

மிதிலைக் காட்சியில் இராமன் விசுவாமித்திரருடன் இராஜவீதியில் போகும்போது சீதை, தன் சேடிகளுடன் மாடத்தின்மேல் வீதியைப் பார்த்துக்கொண்டு நிற்கிறாள். அந்த மாடத்துக்கு அருகில் இராமன் வந்த போது இராமனும் சீதையும் ஏககாலத்தில் ஒருவரை யொருவர் பார்க்கிறார்கள். அந்தக் கணமே ஒருவரை யொருவர் காதலித்து விடுகிறார்கள்.

**நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேலிணே**
**ஆக்கிய மதுகையான் தோளில் ஆழ்ந்தன**
**வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்**
**தாக்கணங்கு அனையவள் தனத்தில் தைத்தவே.**

சீதை பார்த்த பார்வையென்னும் கூர்மையான இரண்டுவேல்களும் வலிமையே வடிவான இராமனுடைய தோள்களில் ஆழப்பாய்ந்தன. வீரக் கழல்களணிந்த வீரனுகிய இராமனுடைய தாமரைபோன்ற கண்களின் பாவையும் இலக்குமியைப் போன்ற சீதையின் ஸ்தனங்களிற் பதிந்தது.

**பருகிய நோக்கு எனும் பாசத்தால் பிணித்து**
**ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்**
**வரிசிலை அண்ணலும் வாள்கண் நங்கையும்**
**இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினர்.**

ஒருவருடைய அழகை ஒருவர் குடிப்பதுபோல் பார்த்த பாசத்தால் கட்டுண்டு இருவருடைய உள்ளமும் ஒருவரையொருவர் இழுத்ததால் இராமனும் சீதையும் ஒருவர் உள்ளத்தில் மற்றவர் புகுந்துகொண்டார்கள். அதாவது இராமனுடைய உள்ளத்தில் சீதையின் வடிவமும், சீதையின் உள்ளத்தில் இராமனுடைய வடிவமும் பதிந்துவிட்டன.

இராமன் தெருவோடு போய்விடுகின்ருன். ஆனுல், சிதைக்குக் காமநோய் கண்டு மயக்கமடைகிருள். சேடியர்களெல்லாம் காரணம் என்னவென்று தெரியாமல் தவிக்கிருர்கள். மயக்கமடைந்த சீதையை மலர்ப் படுக்கையில் கிடத்தி, என்னென்னவோ பரிகாரம் நாடுகின்ருர்கள். சீதை இராமனையே நினைத்துக்கொண்டும்



உருவெளியில் அவனைப் பார்த்துப் பிதற்றிக்கொண்டும் துடித்துக்கொண்டிருக்கிருள்.

அப்போது சூரியன் அஸ்தமனமாகிருன்:

**அன்னமென் நடையவட்கு அமைந்த காமத்தீ**
**தன்னையும் சுடுவது தரிக்கிலான் என**
**நன்நெடுங் கரங்களை நடுக்கி ஓடிப்போய்**
**முன்னைவெம் கதிரவன் கடலில் மூழ்கினுன்.**

அன்னம்போன்ற நடையுடைய சீதையின் உடலில் பரவிய காம நெருப்பு தன்னையும் சுடுவதைப் பொறுக்க மாட்டாமல், அந்தச் சூட்டைத் தணித்துக்கொள்ளக் கடலில் முழுகினுன், சூரியன். சீதையின் காமவேதனை அப்படியிருக்க:

சீதையைப் போலவே, கண்டதும் காதல்கொண்டுவிட்ட இராமன் அவளை நினைத்துக்கொண்டே முனிவருடன் போகிருன். முனிவரும் இராமனும் இலக்குவனும் ஒரு தனி மாளிகையில் தங்கியிருக்கச் சனகனுடைய காரியஸ்தர்கள் ஏற்பாடு செய்தார்கள். அந்த மாளிகையில் அவர்கள் மூவரும் படுத்துக்கொள்ளத் தனித்தனிப் படுக்கைகள் தயாராக்கப்பட்டன.

**முனியும் தம்பியும் மொய் மிறையால் தமக்கு**
**இனிய பள்ளிகள் எய்தியபின் இருள்**
**கனியும் போல்பவன் கங்குலும் திங்களும்**
**தனியும் தானும் அத் தையலும் ஆயினுன்.**

விசுவாமித்திர முனிவரும் தம்பி இலக்குவனும் வழி நடந்த களைப்பால் அயர்ந்து தூங்கிவிட்டபின், இராமன் எழுந்து ஒரு திறப்பான இடத்துக்குப் போய் அமர்ந்து

கொண்டு, இராக் காலமும் நிலா வெளிச்சமும் சேர ஏகாந்தமாகத் தானும் அந்தச் சீதையுமாக உறவாடிக் கொண்டிருக்கிருன், மானசமாக.

இரவு முழுதும் தான் கண்ட அப் பெண்ணையே எண்ணியெண்ணிக் காம வேதனை யடைகிருன்.

சந்திரன் மறைந்து சூரியன் உதிக்கிருன். எப்படி உதிக்கிருன் பாருங்கள்.

**ததையும் மலர்த்தார் அண்ணல் இவ்வண்ணம்**
**துயர் உழந்து தளரும் எவ்வை**
**சிதையும் மனத்து இடர்உடைய செங்கமலம் முகம்**
**மலரச் செய்ய வெய்யோன்**
**புதை இருளின் எழுகின்ற புகர்முக யானையின்**
**உரிவை போர்வை போர்த்த**
**உதயகிரி எனும் கடவுள் நுதல் கிழித்த**
**விழியேபோல் உதயம் செய்தான்.**

வெற்றிமாலை யணிந்த இராமன் இப்படிக் காம வேதனை யால் துயரப்பட்டு மனந் தளர்ந்திருக்கும் சமயத்தில், காம நோயால் வருந்துகின்றவர்களுடைய துன்பம் போகவும், செந்தாமரை இதழ் விரியவும், இருட்டாகிய யானைத் தோலைப் போர்த்திக்கொண்டு (அத்தியுரித்த) இருக்கும் உதயகிரி என்ற சிவபெருமான் தின் நெற்றிக் கண்ணைத் திறந்ததுபோல் சிவந்த சூரியன் உதயம் செய்தான்.

முன் சொன்ன அஸ்தமனத்துக்கும் இந்த உதயத் துக்கும் உள்ள தொடர்பைப் பாருங்கள்:

நேற்றுச் சீதையின்மீது படர்ந்த காமத் தீ—தன்னை யும் சுடுவதைப் பொறுக்க மாட்டாமல், காமனுக்குப் பயந்து ஓடிய சூரியன், இன்று காமனை எரித்த சிவபிரா னுடைய நெற்றிக்கண்போல் உதித்தான்.



இதில் சூரியோதய காலத்தில் மனிதருடைய காம ஆசை ஒடுங்கியிருக்கும் என்றும், பிறகு,

**காலை அரும்பி பகலெல்லாம் போதாகி**
**மாலை மலரும் மலர்.**

என்று வள்ளுவன் சொன்னபடி, இயற்கையான நியதியை யும் காட்டுகின்றது.

இன்னொரு உதாரணம்:

கோலங்காண் படலத்தில் வில்லை வளைத்து முறித்து விட்ட இராமன், முனிவருடனும் தம்பியுடனும் சனக னுடைய சபையில் வீற்றிருக்க, சீதை சபைக்கு அழைத்து வரப்படுகிருள். மணமகனும் மணமகளும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொள்ளவும் திருமண முகூர்த்தம் நிச்சயம் செய்யவும் ஏற்படுத்திய சடங்கு போன்ற சமயம்.

சபைக்கு வந்த சீதையை இராமன் இமை கொட் டாமல் பார்த்து, மிதிலைக்குள் வந்தபோது மாடத்தின் மீது கண்ட அந்தப் பெண்தானு என்று ஆராய்ந்தான். அவன், முன் பார்த்தபோது சாதாரண ஒப்பனையோடு இருந்த சீதை இப்போது மணப்பெண்ணுக்குரிய சிங்கா ரிப்புடன் வந்ததனுல் இராமன் அவள்தானு அல்லவா என்று நிச்சயிக்க முடியாமல் சிறிதுநேரம் திணறி விட்டான். பிறகு, அவள்தான் என்று கண்டுகொண்டு, வெகு பாடுபட்டுப் பாற்கடலைக் கடைந்து அமிர்தத்துக் காகக் காத்திருந்த தேவேந்திரன் அமிர்தத்தைக் கண்டு விட்டதுபோல் பரவச மடைந்துவிட்டான்.

இராமனைப் போலவே, சீதையும் வில்லை ஒடித்த அரசகுமாரன், தான் மாடத்தின்மீதிருந்து பார்த்த அந்த அழகன்தானா என்று அறிந்துகொள்ள ஆசைப்பட்டாள். ஆனால், பருவப் பெண்ணானதால் நேராகப் பார்க்க முடியவில்லை. அதனால் தன் கை வளையல்களைச் சரிப்படுத்துவது போல் தலையைச் சாய்த்து முனிவருக்கு அருகிலிருந்த அழகனைப் பார்த்து ஆம் அவனேதான் என்று அறிந்தவுடன், கடலைக் கடைந்து வந்த அமிர்தம் முழுவதையும் அவளே அருந்திவிட்டது போல் உடல் பூரித்தாள்.

(இங்கே, இராமன் சீதையைத் தான் மாடத்திற் கண்ட பெண்தான் என்று அறிந்து அமிர்தத்தைக் கண்ட இந்திரன்போல் மகிழ்ச்சியடைந்தான் என்று சொன்ன கம்பன், சீதை இராமனை, தான் மாடத்தின்மீது நின்றுகொண்டிருந்தபோது தெருவில் வரக் கண்ட அதே அழகன்தான் என்று அறிந்துகொண்டபோது பாற்கடலில் எழுந்த அமிர்தம் முழுவதையும் தான் ஒருத்தியே உண்டதுபோல் பூரித்தாள் என்று, ஒரே அமிர்தத்தை இரண்டிடத்திலும் சுட்டுகின்ற அழகும் ரசிக்கத்தக்கது.)

தசரத மன்னன் விசுவாமித்திரரைப் பார்த்து, ''இராமனுக்கும் சீதைக்கும் திருமணம் நடத்த முகூர்த்த நாள் சொல்லுங்கள்'' என்றான்.

''நாளைய தினமே நல்ல முகூர்த்தம்'' என்றார், முனிவர்.

முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டபின் சபை கலைகிறது.

**அன்னம் அரிதிற்பிரிய அண்ணலும் அகன்று அப்**
**பொன்னின்நெடு மாடவரை புக்கான் மணிப்பூண்**



**மன்னவர் பிரிந்தனர்கள் மாதவர்கள் போனார்**
**மின்னுசுடர் நாயகனும் மேருவில் மறைந்தான்.**

அன்னம் போன்ற சீதை சபையைவிட்டுப் போனாள். இராமனும் சபையைவிட்டு மலைபோல் உயர்ந்துள்ள தான் தங்கியிருக்கும் அழகான மாளிகைக்குள் புகுந்தான். அரசர்கள் போனார்கள். முனிவர்களும் போனார்கள். ஒளிக்கு நாயகனாகிய சூரியனும் மேரு மலையில் அஸ்தமித்தான்.

இப்படியாக எல்லோரும் மறுநாள் நடக்கப்போகிற திருமண விழாவைக் காணப்போகிற மகிழ்ச்சியுடன் அன்றைய இரவைக் கழித்தார்கள். சீதையும் இராமனும் அவரவர் படுக்கையில் புரண்டுகொண்டு ஒருவரையொருவர் நினைத்தவண்ணம் எப்போது விடியும் என்று ஏங்குகிறார்கள். நகர மக்கள் ஆண்களும் பெண்களும் பொழுது விடியுமுன்னமே மண விழாவுக்குப் போகத் தங்களை அலங்கரித்துக்கொள்கிறார்கள்.

சூரியன் உதயமாகிறான்:

**அஞ்சன ஒளியானும் அலர்மிசை உறைவாளும்**
**எஞ்சலில் மணம்நாளை புணர்குவர் எனலோடும்**
**செஞ்சுடர் இருள்கீறி தினகரன்ஒரு தேர்மேல்**
**மஞ்சனை அணிகோலம் காணிய எனவந்தான்.**

கருநீல வண்ணனாகிய இராமனும், தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளாகிய சீதையும் நாளை மணந்துகொள்ளுகிறார்கள் என்று, சூரியன் அவனுடைய ஒப்பற்ற தேரின்மீது ஏறித் தன் சிவந்த கிரணங்களால் இருட்டைப் பிளந்துகொண்டு தன்னுடைய குலத்தின் தோன்றலாகிய (சூரிய குலம் இராமனுடைய குலம்) மைந்தனை மணக்கோலத்திற் காண்பதற்காக வந்தான்.

அஸ்தமனத்துக்கும் உதயத்துக்கும் உள்ள தொடர்பு குறிப்பிடத்தக்கது.

மற்ெருரு உதாரணம்:

இராமன், வசிட்டரும் நகர மக்களும் தடுத்தும் கேளாமல் தேரேறிச் சீதையோடும் இலக்குவனேடும் காட்டுக்குப் புறப்பட்டுவிட்டான். காட்டை அடைவதற்கு முன் சூரியன் அஸ்தமிக்கிறுன்.

**மீன் புகழ்பெற வெயில்ஒதுங்க மேதியோடு**
**ஆன்புகக் கதிரவன் அத்தன் புக்கனன்**
**கான்புகக் காண்கிலேன் என்று கல்லதர்**
**தான்புக முடுகினுன் என்னும் தன்மையான்.**

நட்சத்திரங்கள் விளங்கும்படி வெயில் மறைய, எருமைகளும் பசுக்களும் மேய்ச்சலிலிருந்து வீடுகளுக்குள் வர, இராமன் காட்டுக்குள் போவதைப் பார்த்துச் சகிக்க மாட்டேன் என்று இராமனுக்கு முன்ஞல் தான் காட்டுக்குப் போக விரைந்தான் போல, சூரியன் அஸ்தமித்தான்.

இராமன் காட்டுக்குள் சீதையோடும் இலக்குவனேடும் போய்விட்டான் என்று சுமந்திரன் சொன்னவுடனே தசரதனுடைய உயிரும் போய்விடுகிறது.

இரவு முழுதும் தசரதனுடைய மனைவிமார்களும் நகர மக்களும் அழுதுகொண்டிருக்கிறுர்கள். அப்போது பரதன் அயோத்தியில் இல்லை. அவன் கைகேசியின் பிறந்த வீடாகிய கேகய நாட்டுக்குப் போயிருந்தான். மன்னன் இறந்துவிட்ட சேதியை அவனுக்குத் தெரியப்படுத்தி அவனை அழைத்துவர ஓலையுடன் தூதுவர்கள் அனுப்பப்படுகிறுர்கள். பரதன் வருகிறவரைக்கும் தசரதனுடைய சடலம் கெடாமல் இருக்க அதைத் தைலத்தில் முழுகியிருக்கச் செய்கிறுர்கள்.



சூரியன் உதயமாகிறுன்:

**மீனீர் வேலை முரசியம்ப விண்ணேர் ஏத்த**
**மண் இரைஞ்ச**
**தூநீர் ஒளிவாள் புடை இலங்க சுடர்த்தேர் ஏறி**
**தோன்றினுன்**
**வானே புக்கான் அரும் புதல்வன் மக்கள் அகன்றுர்**
**வருமளவும்**
**யானே காப்பன் இவ்வுலகை என்பான் போல**
**எறிகதிரோன்.**

கடலோசை முரசொலிபோல் முழங்க, தேவர்கள் வாழ்த்த, உலக மக்கள் வணங்கி அஞ்சலி செய்ய, பரிசுத்தமான ஒளியாகிய உடை வாள் இடுப்பில் விளங்க, (அரச சின்னங்களோடு) "என் குலத்தின் அருமைப் புதல்வனை தசரதன் இறந்து வானுலகத்துக்குப் போய்விட்டான். அவனுடைய மக்களாகிய இராமனும் இலக்குவனும் காட்டுக்குப் போய்விட்டார்கள். பரதனும் சத்துருக்னனும் கேகய நாட்டுக்குப் போய்விட்டார்கள். (நாட்டைப் பரிபாலிக்க யாருமில்லை) அதனுல் அவர்கள் யாராவது வந்து அரசாட்சியை ஏற்றுக்கொள்ளும் வரை (சூரிய குலத் தலைவனை) நானே இந்நாட்டை அரசாள்வேன்' என்று சொல்வது போல் ஒளிமயமான தேரில் ஏறிக்கொண்டு உதயமானுன், சூரியன்.

இராமன் காட்டுக்குப் போவதைப் பார்த்துச் சகிக்க முடியாது என்று அஞ்சி இராமனுக்கு முன்ஞல் காட்டுக்கு

ஓடியதுபோல் அஸ்தமித்த சூரியன், இராமன் காட்டுக்குப்போய் விட்டதையும் அதனுல் தசரதன் இறந்து விட்டதையும் அறிந்து, அயோத்தியைப் பரிபாலிக்கத் தானே வருவதாகக் கற்பனை தொடர்வது ஒரு அழகுதானே.

இன்னொரு உதாரணம்:

கங்கைப் படலத்தில்—இராமன், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும் கங்கைக் கரையை அடைந்து, அங்கே தங்கியிருக்கிருர்கள். இராமன் வந்திருப்பதை அறிந்த குகன், இராமனைக் காண வருகிருன். இராமன் குகனை அன்புடன் வரவேற்று அவனுடன் சல்லாபித்தபின் இருட்டுகிற சமயமாகி விட்டதால் குகனைத் தம்முடன் தங்கும்படிச் சொல்லுகிருன்.

அப்போது சூரியன் அஸ்தமிக்கிருன்:

**விரிஇருள் பகையை ஓட்டி திசைகளை வென்று மேல்**
**நின்று**
**ஒருதனித் திகிரி உந்தி உயர்புகழ் நிறுவி நாளும்**
**இருநிலத்து எவர்க்கும் உள்ளத்து இருந்தனன்**
**என்ன வீய்ந்த**
**செருவலி வீரன் என்ன செங்கதிர் செல்வன்**
**சென்ருன்.**

பரந்த இருட்டாகிய பகைவனை ஓடச் செய்து, அட்டதிக்குகளையும் வென்று, எல்லாருக்கும் மேலவனுக இருந்து, ஒப்பற்ற ஒற்றைச் சக்கரத்தை நடத்தி, சிறந்த புகழை நிலைநாட்டி, உலகத்திலுள்ள எல்லாருடைய உள்ளத்திலும் எப்போதும் குடிகொண்டவனுக இருந்து, மாண்டுபோன வலிமை மிகுந்தப் போர் வீரனைப்போல் செங்கிரணங்களோடு சூரியன் அஸ்தமனமானுன்.



இதில், ஒரு மனிதன் எல்லாச் சிறப்புகளும் அமைந்தவனுகி எவ்வளவு புகழ் பெற்றவனுக இருந்தாலும் ஒரு நாள் மாண்டொழிந்தே தீரவேண்டும் என்ற உண்மை நினைப்பூட்டப்படுகிறது.

அப்படி மாண்டுபோன சூரியன் மீண்டும் உதிக்கிருன்.

**துறக்கமே முதலவாய தூயன யாவை யேனும்**
**மறக்குமா நினையல் அம்மா வரம்பில தோற்றும்**
**மாக்கள்**
**இறக்குமாறு இது என்பான்போல் முன்னை நாள்,**
**இறந்தான் பின் நாள்**
**பிறக்குமாறு இதுஎன்பான்போல் பிறந்தனன்**
**பிறவா வெய்யோன்.**

சொர்க்கமே முதலிய இந்திரலோகம், வைகுந்தம், கைலாசம் என்று சொல்லப்படுகிற பரிசுத்தமான உலகங்கள் எவையாஞலும் உயிர்கள் மறந்துவிடுமோ, நினைக்கமுடியவில்லை. ஆனுல், இந்த உலகத்தில் எண்ணிக்கைக்கு அடங்காத மனிதர்கள் மீண்டும் மீண்டும் பிறக்கிருர்கள். மனிதன் இறப்பது இப்படித்தான் என்று காட்டுவான்போல் முந்தின நாள் இறந்துபோன சூரியன், மனிதன் மீண்டும் பிறப்பது இப்படித்தான் என்று காட்டுவான்போல் அடுத்த நாள் பிறந்தான்! ஆனுல், சூரியன் பிறப்பு இறப்பு இல்லாதவன்.

அஸ்தமன வருணிப்பில் எப்படிப்பட்ட புகழுடைய மனிதஞனாலும் இறந்தே போவான் என்பதுபோல் சூரியன் மறைந்தான். உதயத்தை வருணிப்பதில் இறந்து

உயிர் மீண்டும் பிறக்கும் என்ற தத்துவத்தைக் கூட்டு கிறது.

இப்படியாகக் கம்பன் கவிதையில் எண்ணற்ற இலக்கியச் சுவைகளை நுகரலாம். அதனால்தான் 'கம்பன் கவிதை இன்பக் குவியல்' என்பது பொருந்தும்.

★

ஜாக்கெட் அச்சிட்டோர்:
மெட்ரோபலிட்டன் பிரிண்டர்ஸ், சென்னை-2